KBL AJN

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-கஉ.] பிரமாதீசஷு மார்கழிமீ [பகுதி-உ.
Vol. XII. December—January. 1914. No. 2.

சோழன்கரிகாலன் 55 கி. பி.—95 கி. பி.

பண்டைக்காலங்களிற் சோழநாட்டை மிக்கநீதியுடனும் சிறப்புடனும் ஆண்டுவந்த சோழ அரசர்களுட் சிலர்சரிதத்தை, யான் அறிந்தவரை நம் நாட்டார்க்குத்தெரிவிப்பது என்கடமையாதலின், ஈண்டுச் சோழன் கரிகாலன்சரிதத்தை ஒருவாறு சுருக்கி எழுதப் புகுந்தேன்.

இவ்வரசனை, சோழன்கரிகாலனென்றும், சோழன்கரிகால்வளவனென்றும், சோழன்கரிகாற்பெருவளத்தானென்றும், பழைய நூல்கள் கூறுகின்றன. ஆயினும், சோழவம்சபாரம்பரையிற் கரிகாலன்காலத்திற்குப்பின்னர், அவன்பெயரையேதரித்த அரசர் பலரிருந்தனரென்று தெரியவருகிறதினால், இவனைக் கரிகாலன்முதலாவான் என்றேவழங்கல் சாலப்பொருந்தும்.

உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னியின் அருமைப்புத்திரனாகிய இம்மன்னர்பெருமான் ஆட்சிபுரிந்தகாலம் கி.பி. 55 முதல் கி.பி. 95 வரையிலுமென்று '1800 ஆண்டுகட்குமுந்தியதமிழர்' என்னும் நூலுடையார் கூறுகின்றனர். இதனை, மற்றைய பழஞ்சரித்திராராய்ச்சிவல்லாரும் அங்கீகரித்திருக்கின்றனர்.

இவ்வரசன் சிறுவனாயிருக்கும்போது காலில் நெருப்புப்பற்றிக் கால் வெந்துபோயிற்று. இக்காரணம்பற்றியே இவன் கரிகாலனென்றுவழங்கப்படுகிறான்போலும். இவன்காலில் நெருப்புப்பற்றிய விஷயம்,

"முச்சக்கரமுமளப்பதற்குநீட்டியகா
லிச்சக்கரமேயளந்ததாற்—செய்ச்செ
யரிகான்மேற்றேன்ஞெடுக்குமாய்புனனீர்நாடன்
கரிகாலன்காலெனருப்புற்று."

என்ற பழையசெய்யுளால் அறியப்படுகிறது.

இவன் பால்யத்திலேயே சிங்காதனம் ஏறும்படி நேர்ந்தது. இவன் பட்டத்திற்குவந்தவுடனே ஓர் ஆச்சரியமான சம்பவம் நிகழ்ந்தது. அதாவது, தமக்குள் சண்டையிட்டுக்கொண்டு நியாய ஸ்தலத்திற்குத் தீர்த்துக்கொள்ளும்பொருட்டுவந்த இருமுதியோர்கள் தாம் நெடுந்தூரத்தில்வரும்போதே நியாயசபையில் ஓர் இளைஞனிருப்பதாக அறிந்து அவ்விளைஞனால் தம்வழக்கை நியாயமாய்த் தீர்க்கமுடியாதென்று சந்தேகித்தார்கள். அவர்கள் சந்தேகித்த விஷயத்தை ஒற்றர்கள்மூலமாகவோ அல்லது வேறு எவ்விதமாகவோ அறிந்துகொண்டகரிகாலன், அரமனைக்குள் விரைந்துசென்று, கிழவனைப்போல் மாறுவேடம்பூண்டுகொண்டு சிங்காதனத்தமர்ந்திருந்தனன். பின்னர், நியாயசபையைநோக்கிவந்தவிருவரும் சிங்காதனத்தில் வயதுமுதிர்ந்தவரசனே இருக்கிறானென்றுணர்ந்து தங்கள் வழக்கைத் தெரிவித்துக்கொண்டார்கள். இளைஞனாயினுங் கூரிய புத்தியுள்ள கரிகாலன், அன்னவர்வழக்கை நன்றாய்விசாரித்து நியாயமளித்தனன். இச்செய்கை, இம்மன்னனது நுண்ணறிவையும், நீதி பரிபாலனமாண்பையும் நன்குவிளக்குவதோடு, குடிகள்மனம் எவ்வாறோ அவ்வாறே தான் நடந்துகொள்ளவேண்டுமென்ற எண்ணமும் அவனிடத்திருந்ததென்பதையும் புலப்படுத்துகிறது. இவ்வாச்சரியமானவிஷயத்தை,

"இளமைநாணிமுதுமையெய்தி
யுரைமுடிவுகாட்டியவுரவோன்"

என்ற மணிமேகலையானும்,

"உரைமுடிவுகாணானிளமையோனென்ற
நரைமுதுமக்களுவப்ப—நரைமுடித்துச்
சொல்லான்முறைசெய்தான்சோழன்குலவிச்சை
கல்லாமற்பாகம்படும்"

என்ற பழமொழிச்செய்யுளானும் நன்குணரலாம். இவன் றன் ஆட்சிக்காலத்தில், காடுகளையழித்து நாடு உண்டுபண்ணி, பழைய

ஊர்களைப் புதிப்பித்து, புதிதாக அநேகம்பட்டினங்களை ஸ்தாபித்து, அநேக குளங்களுங் கால்வாய்களும் வெட்டி, அதனால் ஜலாதாரம் உண்டுபண்ணி, விவசாயிகளின் க்ஷேமத்தைப்பெருக்கி, கோயிலமைத்து, தன்னிராஜதானியைச்சுற்றி மதிலெழுப்பித் தேசத்தைச் சரியாகப் பாதுகாத்தானென்பது,

"காடுகொன்றுநாடாக்கிக்
குளந்தொட்டுவளம்பெருக்கிப்
பிறங்குநிலைமாடத் துறந்தைபோக்கிக்
கோயிலொடுகுடிநிறீஇ
வாயிலொடுபுழையமைத்து
ஞாயிற்றொறும்புதைநிறீஇ"

என்ற பட்டினப்பாலைச்செய்யுளடிகளால் அறியப்படுகிறது.

அன்றியும், முதற்கயவாகுவின் தகப்பன்காலத்தில், இவன் இலங்கையின்மீது படையெடுத்துச்சென்று, 1200 சிங்களவர்களைச் சிறைபிடித்துச் சோழதேசத்திற்குக்கொண்டுவந்து, காவிரியி னிரு மருங்குங் கரையெடுப்பித்தான். இதனை "தொழுதுமன்னரேகரை செய்பொன்னியில்" என்ற கலிங்கத்துப்பரணிச்செய்யுளாலுணர்க. இதனால், இவன் பகைவரைவெல்லு மாண்மையிற்சிறந்தவனென் பதும், ஜலாதாரம் உண்டுபண்ணி விவசாயிகளின் க்ஷேமத்தை விருத்திபண்ணியவனென்பதுந் தெரியக்கிடக்கின்றன.

விவசாயிகள் சிறப்புடன்விளங்கினமையால் வியாபாரம் மிகச் செழித்தது. இம்மன்னன் இராஜதானிநகரமாகவிளங்கியது பூம்புகாரெனுங் காவிரிப்பூம்பட்டினமே. இஃது ஒரு சிறந்த துறைமுகப் பட்டினமாக அக்காலத்திருந்தது. கப்பல்கள் திசைமாறியும் நிலைமாறியுஞ் செல்லாமல் துறைமுகத்திற்கு வந்துசேரும்பொருட்டு இப்பட்டினத்தில் அநேக தீபஸ்தம்பங்கள் இருந்தனவாம். இதனை "இலங்குநீர்வரைப்பிற்கலங்கரைவிளக்கமும்" என்ற சிலப்பதிகாரத்தாலுணர்க.

இத்துறைமுகத்தில், குதிரை, கற்பூரம், சந்தனம், அகில்முதலியவை இறக்குமதிசெய்யப்பெற்றன; முத்து, பவளம், மிளகு, வாசனைச்சாமான்முதலியவை ஏற்றுமதிசெய்யப்பட்டன. இவ்விதமாக வியாபாரம் நடந்தமையான் அரசனுக்கு ஏற்றுமதி இறக்குமதி

மூலமாய் வரக்கூடிய இறைவரியிலிருந்து வருமானமும் அதிகரித்தது. கடலோரங்களிற் கட்டப்பட்டுள்ள பெரிய பண்டசாலைகளில் இரவும் பகலும் வந்திறங்கிய பண்டப்பொதியின்மீது, அரசனுடைய உத்தியோகஸ்தர்கள் சோழன்கொடியின் அடையாளமாகப் புலிப்பொறியைப் பொறித்துவிடுவார்கள். அவ்வாறு பொறித்தபிறகு வரியைக் கொடுத்து ரசீதைப்பெற்றுக்கொண்டுதான் வியாபாரிகள் தமது பண்டங்களை வெளியே எடுத்துப்போவார்கள். இவற்றை,

"அளந்தறியாப்பலபண்டம்
வரம்பறியாமைவந்தீண்டி
யருங்கடிப்பெருங்காப்பின்
வலியுடைவல்லணங்கினோன்
புலிபொறித்துப்புறம்போக்கி"

என்ற செய்யுளடிகளாலறிக. வியாபாரத்திற்காக வெளியூர்களிலிருந்துவந்துள்ளவர்த்தகர்கள் உள்ளூரிலிருந்த வர்த்தகர்களோடு இனிமையாகக்கலந்து வாழ்ந்தார்கள். இவர்கள் "பதிபழகிக்கலந்தினிதுறையும்" வர்த்தகர்கள் என்று சிறப்பிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இம்மன்னர்பெருமான் போர்செய்யவிரும்பி வடதிசைக்குச் சென்று வடபுலத்தரசர்களைவென்று, ஆங்கு எதிரே குறுக்கிட்ட இமயமலையைச் செண்டினால் அடித்து அதன் பிடரிடத்தே தனது புலியைப் பொறித்துவந்தானென்பது,

"இருநிலமருங்கிற்பொருநரைப்பெறாஅச்
செருவெங்காதற்றிருமாவளவன்
....
..........................சிமயப்பிடர்த்தலைக்
கொடுவரியேற்றிக்கொள்கையிற்பெயர்வோற்கு,"

என்னும் சிலப்பதிகாரத்தானும்,

"செண்டுகொண்டுகரிகாலனொருகாலினிமயச்
சிமயமால்வரைதிரித்தருளிமீளவதனைப்
பண்டுநின்றபடிநிற்கவிதுவென்றுமுதுகிற்
பாய்புலிக்குறிபொறித்ததுமறித்தபொழுதே".

என்னுங் கலிங்கத்துப்பரணியானும்,

"கச்சிவளைக்கச்சிகாமக்கோட்டங்காவன்
மெச்சியினிதிருக்குமெய்ச்சாத்தன்—கைச்செண்டு
கம்பக்களிற்றுக்கரிகாற்பெருவளத்தான்
செம்பொற்கிரிதிரித்தசெண்டு"

என்னும் பழையசெய்யுளானும்,

"............இலங்குவேற்கரிகாற்பெருவளத்தோன்
வன்றிறற்புலியிமயமால்வரைமேல்வைக்கவேகுவோன்"

என்னும் பெரியபுராணத்தானும் அறியக்கிடக்கின்றது.

இதனல் இவன்போர்வீரமும் ஆண்மையும் நன்குவிளங்குகின்றன. இவன் தேசத்தில் 60,000 குடிகள் இருந்தார்களென்றும் அக்குடிகளும் நெடுநிலமுழுதாளும் கரிகாலனை முதற்குடியாக வைத்து எண்ணுதலையுடைய அவ்வளவு மிக்கோங்கியசெல்வமுள்ள ஒப்பற்ற குடிகளாயிருந்தார்களென்றும் சிலப்பதிகாரம் கூறும்.

இம்மன்னர்பெருமான்மீது கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் ஒரு தமிழ்ப்புலவர் பட்டினப்பாலை என்னும் பிரபந்தம் பாடி 16 லக்ஷம்பொன் பரிசுபெற்றனரென்பது,

"தழுவுசெந்தமிழ்ப்பரிசுவாணர்பொன்
பத்தொடாறுநூறுயிரம்பெறப்
பண்டுபட்டினப்பாலைகொண்டதும்"

என்ற கலிங்கத்துப்பரணிச்செய்யுளால் அறியப்படுகிறது. மேற்கூறிய பிரபந்தமும், இவன்மீது முடத்தாமக்கண்ணியார் என்னும் தமிழ்ப் புலவர்பாடிய பொருநராற்றுப்படை என்னும் பிரபந்தமும் பத்துப் பாட்டிற் காணப்படுகின்றன. அன்றியும், சங்கத்துச்சான்றோர் இவன்மீதியற்றியுள்ள தனிச்செய்யுட்களும் புறநானூற்றிற் காணப் படுகின்றன. இதனல் இவன், தமிழபிமானமேலிட்டு, புலவர்களை ஆதரித்துவந்தவனெனத் தெரிகிறது.

இவ்வரசனின் வாழ்க்கைத்துணைவியா யமைந்தவள் நாங்கூர் வேள்குமாரத்தி; இவர்களுக்கு இரண்டுபுதல்வரும் ஒரு புதல்வியு முண்டு. துறவுபூண்டு சிலப்பதிகாரமியற்றியருளிய இளங்கோவடிகளும் இம்மன்னன் புதல்வியின் புதல்வனே. இவர்களின் பெயர் முதலியவைகளைக் கீழ்க்குறித்துள்ள வம்சாவளியைநோக்கி யறிந்துகொள்க.

வம்சாவளி.

உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி
ஆலந்தூர்வேள்மகள்

சேட்சென்னிநலங்கிள்ளி | மாவளத்தான் நெடுங்கிள்ளி | சோணை (மனக்கிள்ளி) சேரலாதனன்

சேரலாதனன்:
சேரன்செங்குட்டுவன் | இளங்கோவடிகள்

இவன்காலத்திய அரசர்கள்:—பாண்டிநாட்டில் (1) வெள்ளியம்பலத்துத்துஞ்சியபெருவழுதி (2) நெடுஞ்செழியன் I; சேரநாட்டில் (முடிச்) சேரலாதனன் (2) சேரன்செங்குட்டுவன்; இலங்கையில் (1) முதற்கயவாகுவின்தகப்பன் (2) முதற்கயவாகு.

T. V. சதாசிவபண்டாரத்தார்,
திருப்புறம்பயம்.

அந்தகக்கவிவீரராகவமுதலியார்காலம்.

௧௧-ந் தொகுதியின் ௩௮௧-ம் பக்கத் தொடர்ச்சி.

மேலும் தன் ஆட்சிக்குள்ளான தனதுதேயத்தின் ஒருபாகத்திலே வேற்றுக்குலத்தானொருவன் தன்குலத்தோர் பல்லாயிரவரைக் கூட்டிச்சென்று குடியிருத்திக் கோட்டை கொத்தளங்களைக்கட்டித் தானே அவ்விடத்து அரசுரிமையும் பூண்டு அதைத் தன்னுடாக்கிக் கொள்வதற்கு எவ்வரசனும் உடன்படமாட்டான். ஆதலால் யாழ்ப்புலவன் அரசனுனகதை அரசதந்திர உபாயமுறைகளைக் கிஞ்சித்தேனும் ஊன்றியுணராதோர்வாய்ப்பிறப்பாகவந்த வொரு பொருந்தாக்கட்டென்றுகொள்ளல் தவறன்று.

இனி, யாழ்ப்பாடிக்குப்பின் யாழ்ப்பாணத்தை ஆண்டவனும் நல்லூர்நகரத்தைக்கட்டினவனுமான "ஜெகராசசிங்கையாரின்" என்பவன் நெடுங்காலத்துக்குமுன்னிருந்தானல்லனென்பது வைபவமாலையிற் கூறப்பட்டுள்ள சில குறிப்புக்களால் இலகுவில் விளங்கக்கிடக்கின்றது. எப்படியெனின், "உக்கிரசேனசிங்க"வாசன் சகாப்தம் 717-ல் ஈழத்தின்மேற் படையெடுத்துவந்தனன். இவன்மகன் "வராாசசிங்க"னிடம் யாழ்ப்புலவன் மணற்றிடலைப் பரிசாகப்பெற்று அங்கிருந்த சிங்களவர்மேலும் தான் அழைத்துவந்த தமிழர்மேலும் தானே யாசனுய்ப் பல்லாண்டுகளிருந் திறந்துபோகச் சிலகாலம் அரசனின்றிக் குழப்பமுற்றிருந்த யாழ்ப்பாணத்துக்கு "ஜெகராச சிங்கையாரின்" அரசனுயினன். இவன் நல்லூர்நகரத்தைக் கட்டினுன். இவனுக்குப் பாண்டியனுடைய துணையிருந்ததென "வைபவங்" கூறும்.

இவன்பின் இவன்மகன் "குலசேகரசிங்கையாரின்" அரசனுயினன். இவன்பின் இவன்மகன் "குலோத்துங்கசிங்கையாரின்" அரசனுயினன். இவன்பின் இவன்மகன் விக்கிரமசிங்கையாரியன் அரசனுயினன். இவன்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த சிங்களவருக்கும் தமிழருக்கு மிடையிற் சமயபேதங்காரணமாய்ப் பெருங் குழப்பமுண்டாகி நேரிட்டசண்டையிலே தமிழர் இருவர்மாண்டுபோகக் கலகத்துக்குத் தலைவனுயிருந்த "புஞ்சிவண்டா" வென்ற ஒருசிங்களவன் மாணதண்டத்துக்குள்ளாயினுன். இதைக் கண்ட சிங்களவரில் அநேகர் அச்சமுற்றுத் தேசத்தைவிட்டோடிப்போயினர்.

இவ்வாசன் இறந்தபின் இவன்மகன் "வரோதயசிங்கையாரியன்" அரசனுயினன். இவன் தேசத்திலிருந்த தமிழரையும் சிங்களவரையும் ஒற்றுமைப்படச்செய்து விவேகமாய் அரசாண்டான். இவன் இறந்துபோக இவன்மகன் "மார்த்தாண்டசிங்கையாரியன்" அரசனுயினன். இவன்காலத்தில் வன்னியரென்னும் சிற்றரசர் கலகம் விளைத்து நடந்தசண்டையில் தோல்வியுற்றனர்.

இவன்பின் இவன்மகன் "குணபூஷணசிங்கையாரியன்" அரசனுயினன். இவன் நெடுங்காலம் அரசுநடாத்தி இறுதியில் மூப்பு

மேலிட்டதனால் தன்மகன் "வீரோதயசிங்கையாரிய"னுக்குப் பட்டங் கட்டிவைத்தனன். இவ்வீரோதயன்காலத்தில் வன்னியரும் சிங்களவரும் ஒருங்குசேர்ந்து பெருங்கலகம்விளைத்தும் செருக்களத்தில் தோல்வியுற்று அடங்கினர். இக்காலத்திலேயே "சந்திரசேகர" பாண்டியன் அன்னியசாதியாரால் தன்னாட்டைவிட்டுத்துரத்தப்பட்டு ஈழத்தில் அடைக்கலம்புகுந்தனனாக, வீரோதயன் அப்பாண்டியனுக்குத் துணைநின்று பெருஞ்சேனையொன்றுடன் கடல்கடந்து மதுரைக்குச்சென்று பகைவரைத்துரத்தி அவனை அவன்சிங்காசனத்தில் இருத்தினனென்று வைபவங்கூறும். ஆயின் இவ்வரசன் இளவயதில் இறந்துபோக இவன் மூத்தமகனான "ஜெயவீரசிங்கையாரியன்" தன் பாலவயதில் அரசனாயினன். இவன் சகாப்தம் 1380-ல் கண்டி அரசன் "புவனேகவாகு" என்பவனோடு முத்துக்குளிப்பைப்பற்றியுண்டான்செருவில் வெற்றிபெற்றனனென்றும், பன்னிரண்டு ஆண்டு ஈழம்முழுதும் இவன் ஆட்சிக்குள்ளாயிருந்ததென்றும் பின்பு "பராக்கிரமவாகு" என்னும் சிங்களவரசன் திறைகொடுத்தற்குச் சம்மதித்துக் கண்டியின் அரசுரிமையைப்பெற்றுக்கொண்டானென்றும், இந்த ஒழுங்கை ஏற்படுத்தினவன் பாண்டியனென்றும், இக்காலம் துவக்கம் பலதலைமுறைக்காலம் கண்டியரசர் யாழ்ப்பாணத்தரையருக் குட்பட்டுத் திறைகொடுத்துவந்தனரென்றும் வைபவங்கூறும்.

இனி "ஜெயவீரசிங்கையாரியன்" இறந்துபோக அவன்மகன் "குணவீரசிங்கையாரியன்" அரசனாயினான். கண்டியரசன் வழக்கப்படி திறைகொடுத்தலை ஒழித்ததினால், அவனோடு இவன் யுத்தம் புரிந்து சிங்களநாடுகளிற் சிலவற்றைப்பிடித்து அவைகளிலே தமிழரைக்குடியேற்றினான். பாண்டியனைத் துரத்திவிட்டு மதுரையைத் தாங்களே ஆண்டுகொண்டிருந்த நாயக்கருக்கு இவன் மிகவும் உதவியாயிருந்தவனென்று வைபவங்கூறும். இவன்பின் இவன்மகன் "கனகசூரியசிங்கையாரியன்" அரசனாயினன். இவன்பிரசைகளாகிய சிங்களவரும் வன்னியரும் ஒருமித்தெழும்பி இவனை ஊரைவிட்டோட்ட இவன் திருக்கோவலூரில் தன்மனைவியோடும் சிறுவரான தன்குமாரரோடும் அடைக்கலம் புகுந்தனன். பதினேழாண்டு யாழ்ப்பாணம் "விஜயவாகு"வென்ற ஒரு சிங்களத்தலைவன்கீழிருந்தது.

இவ்விஜயவாகு யாழ்ப்பாணத்திலிருந்த தமிழரை அதிகுரூரமாய் நடத்தினதுமல்லாமற் சிங்களவருடைய உடைமையும் பழக்க வழக்கங்களையும் கைக்கொள்ளும்படி வலாற்காரம்பண்ணினன். முடிவிற் பாண்டிநாட்டை அக்காலம் அங்கங்கு ஆண்டுகொண்டிருந்த சிற்றரசருடைய உதவியினுல் கனகசூரியனுடைய மூத்தமகன் "பரராசசேகரசிங்கையாரியன்" சிங்களவருடன் கடும்போர்செய்து அவர்களைத்துரத்தித் தனது தந்தையாரையே சிங்காசனமேற்றினன். இவன் சிலகாலம் ஆண்டபின் வயோதிகங் காரணமாய் ராஜ்ஜிய பாரத்தைத் தனது மூத்தமகனுக்குக் கையளித்தனன். இவனே அந்தகக்கவிவீரராகவமுதலியாருக்குப் பரிசுகளளித்த ஈழத்தரசன். இவ்வரசன் உயிரோடிருக்கும்போதே இவன் வைப்பாட்டிமகன் "சங்கிலி" யென்பவன் முடியைக்கவர்ந்து சிங்களக்குடிகளை ஊரிலிருந்துதுரத்திப் பலவிதகுரூரங்களைநடப்பித்து யாழ்ப்பாணவரையர் பெருங்குடியின் அழிவுக்குக் காரணமாயினன். இவன் கொடுங்கோன்மையைச் சகிக்க வியலாமற் பெரியோர் பலர்கூடித் தரங்கம்பாடியிலிருந்த போர்த்துக்கீசருக்கு ஆளனுப்பி அழைப்பித்து இக்கொடியோனை அவ்வன்னியர்கையில் ஒப்புக்கொடுக்க அவர்கள் அவனை கி. பி. 1618-ம் ஆண்டு நல்லூரிலிருந்த வீரமாகாளியம்மன் கோவிலுக்குமுன்னே வாளுக்கிரையாக்கிப் பின்னர் நல்லூரிலிருந்த அரியகட்டடங்களையெல்லாம் இடித்தழித்தும் சுற்றியிருந்தவூர்களைத் தீக்கொளுத்தியும் தேயத்தை வெளவிக்கொண்டனர்.

மேற்சொல்லப்பட்ட அரியகுறிப்புக்களிலிருந்து வெளிப்படும் உண்மைகள் பின்வருமாறு:-முதலாவது: நல்லூரைக்கட்டின ஆரியச் சக்கரவர்த்திக்கும் 17-ம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்த சங்கிலியரசனுக்குமிடையிற் பதினொருதலைமுறைக்காலம் சென்றது. இரண்டாவது: ஆரியச் சக்கரவர்த்தியென்பவன் மதுரையைச்சேர்ந்தவனென்பதும், பாண்டியனுதவியோடு யாழ்ப்பாணம்வந்தவனென்பதும், நல்லூர்நகரமே இவ்வரசருடையதலைநகரமென்பதும் வெளிப்படையாம். மூன்றுவது: தமிழர் யாழ்ப்பாணத்துக்குவந்து குடியேறுமுன்னமே சிங்களவர் அவ்வூரிற் குடியேறியிருந்தார்களென்பதும், சிங்களக்குடிகள் சங்கிலியரசன்காலம்வரைக்கும் யாழ்ப்பாணத்தரசர் அஞ்சத்தக்க பெருந்தொகையானவர்களாயும்

செல்வாக்குள்ளவர்களாயும் இருந்தார்களென்பதும் ஊகிக்கக்கிடக்கின்றது. நான்காவது:சிங்களவரசரிற்சிலர் ஒருவர்பின் ஒருவர் நெடுங்காலம் யாழ்ப்பாணத்தரசருக்குக் கீழடங்கித் திறைகொடுத்துவந்தன ரென்பதும், இப்படித் திறைகொடுத்த அரசர்களிலொருவன் "புவனேகவாகு" என்றபெயருடையோனென்பதும், பின்பு "பராக்கிரமவாகு" என்ற வொருசிங்களவரசன் திறைகொடுத்தலைநிறுத்தி எதிர்த்ததனல் உண்டான சண்டையிலே "ஆரியச்சக்கரவர்த்தி" தோல்வியடையாதிருந்தும் முன்கொடுத்த திறையைத் திரும்பவுஞ் சுமத்த இயலாதிருந்தன னென்பதும், "ஆரியச்சக்கரவர்த்தி"க்குத் திறைகொடுக்கும்படி ஒழுங்குசெய்தது பாண்டியனென்பதும்அறியலாகும். ஐந்தாவது: தங்கள் ஆட்சியின் முற்கூற்றிலே ஈழத்தரசர்களைத் தம் அடிப்படுத்திக்கொண்ட யாழ்ப்பாணமன்னர் வரவரத் தம் வலிகுறைந்து சிற்றரசர்நிலையை யடைந்தோராயினரென்றும், 16-ம் நூற்றாண்டின் முதற்பகுதியிலிருந்தவனுன பரராசசிங்கனது தந்தையார் "கனகச்சக்கரவர்த்தி" சிங்களவராலும் வன்னியராலும் நெருக்கப்பட்டு ஊரைவிட்டு ஓடினரென்றும், யாழ்ப்பாணம் பல்லாண்டுகளாய்ச் சிங்களவரசர்களால் ஆளப்பட்டதென்றும் அறியலாகும். ஆறாவது: யாழ்ப்பாணத்துச் சக்கரவர்த்திகள் தங்களைச் சிங்கபுரத்து ஆரியரென்றுசொல்லிவந்தனரென்றும்,இலங்கையின் வடபாகத்தில் நெடுங்காலமாகச் சிற்றரசர்களாயிருந்த வன்னியருக்கும் இவர்களுக்குமிடையிற் பன்முறைநிகழ்ந்தகலகங்களினுல் இவ்விருகட்சியாரும் ஒரேகுலத்தைச்சேர்ந்தவரல்லரென்றும் ஊகிக்கற்பாலது. இனி மேற்சொல்லியுள்ள குறிப்புக்களுக்குச் சிங்கள இதிகாசங்களில் ஆதாரங்கள் உளவோ என நுணுகி ஆராய்வாம். இவ்வாராய்ச்சி சக்கரவர்த்திகள் காலவரையறையைத் திட்டமாய் அறிதற்கு இன்றியமையாததென்பது சொல்லாமலே விளங்கும்.

(தொடரும்)

வே. ஜோ. தம்பிப்பிள்ளை, M. R. A. S.

ஆக்கச்சொல்விளக்கம்.

(கக-ஆந் தொகுதியின் ௩௭௫-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

அற்றேலஃதாக, 'ஏமாப்புடைத்து' என்பதற்கு 'வலியுடைத்து' என்று பொருள்கூறினாலே அமையும். 'வலியாதலுடைத்து.' என ஆதல் என்னுஞ்சொல்லை வருவித்துரைத்தவா றியாதோவெனிற் கூறுதும்.

இயற்கைப்பொருள் செயற்கைப்பொருளென இருவகைப்படும் பொருள்களுள் இயற்கைப்பொருளாயின் இத்தன்மைத்தென்று கூறல்வேண்டும். செயற்கைப்பொருளாயின் இத்தன்மைத்தாயிற்று என்று கூறல்வேண்டும். இவ்விலக்கணத்துக்கு விதி 'இயற்கைப் பொருளை இற்றெனக்கிளத்தல்' 'செயற்கைப்பொருளை ஆக்கமொடு கூறல்' என்னுந் தொல்காப்பியச்சூத்திரங்களாம். ஆகவே இயற்கைப் பொருள் 'நீர் தண்ணிது, தீ வெய்யது, திங்கள் வெளிது, இருள் கரிது' என வருமென்பதாயிற்று. இற்று என்பது வினைக்குறிப்பு வாய்பாடு. நீர்முதலாயினவற்றுக்குத் தண்மைமுதலாயின இயல் பாதலால் அவை இயற்கைப்பொருளெனப்படும். அவ்வாய்பாட் டானேயன்றிச் சிறுபான்மை நீர் குளிரும் - குளிர்வது எனவும், தீச் சுடும் - சுடுவது எனவும், வளி உளரும் - உளர்வது எனவும், உயிர் உணரும் - உணர்வது எனவும் தெரிநிலைவினைவாய்பாட்டான்வரி னும் இற்றென்னும் பொருள்படநிற்றலின் அமையுமென்க.

'வளியின்கண்ணும் உயிரின்கண்ணும் உளர்தலும் உணர்தலு மாகியசெயல் நிகழ்ந்ததுணையானே அவற்றிற்கு அவை செயற்கை யாமன்றி இயற்கையாகாமையின் வளியுளருந்தன்மைத்து, உயிருண ருந்தன்மைத்து என்று கூறல்வேண்டுமெனச் சங்கரநமச்சிவாயப் புலவர் கூறினாராலெனின், அவர் 'முக்காலத்தினுமொத்தியல்பொ ருளை'என்னுஞ் சூத்திரத்துரையுள்'யா றொழுகும்,தீச் சுடும் என்பது ஒழுகுந்தன்மையையுடையது, சுடுந்தன்மையையுடையது என்னும் பொருட்டாய்நிற்றலின் 'இயற்கைப்பொருளை யிற்றெனக்கிளத்தல்' என்னுஞ் சூத்திரத்தின்பாற்படும் என்று கூறினாராதலின் அவர்க் கது கருத்தன்றென்க.

ஒரோவழிப் பெயரும் இற்றென்னும்பொருள்படவரின் அமையும் என்க. அஃது அப்பொருள்படவருதல் 'ஐந்தாகுவதே...... இதனினிற்றிது........என்னுஞ் சூத்திரவுரையானும் உணர்க.

செயற்கைப்பொருள் 'நீர் வெய்யதாயிற்று, நறுமணமுடைத்தாயிற்று, திங்கள் கரிதாயிற்று என வருதலாயிற்று. நீர்முதலாயினவற்றுக்கு வெம்மைமுதலாயின செயற்கையால்வந்தனவாகலின் அவை செயற்கைப்பொருளெனப்படும். படவே அச்செயற்கைப்பொருளைவிளக்குதற்குரிய ஆக்கச்சொல்லைத்தந்து இத்தன்மைத்தாயிற்றென்று கூறப்பட்டது. 'ஆக்கமொடுகூறல்' என்பதூஉம் 'இற்று' என்பதை மேலைச்சூத்திரத்தினின்றும் வருவித்து முடிக்கப்படுமென்பது அறிந்துகொள்க. எனவே இங்ஙனம் ஆக்கமொடுகூறாது நீர் வெய்யது, நறுமணமுடைத்து என்றே கூறிவிடலாகாதென்பதாம். கூறின், நீர் இயல்பான் வெய்யது - நறுமணமுடையது எனப்பொருள்பட்டு முன்னொடுபின்மலைவாம். ஆகலின் அங்ஙனம் மலைவுறுமைப்பொருட்டு ஆக்கச்சொல்லொடுகூறல் ஒருதலையான்வேண்டப்படுமென்பதாயிற்று. இவ்வாக்கச்சொல் இவ்வாறு வினைக்குறிப்பின்வழியேயன்றிக் 'குருடன் காண்பானாயினன்' 'காணுதான் கண்டானும்' அவர் உரைப்பாராயினர் எனத்தெரிநிலைவழிவருதலுங்கொள்ளப்படும், ஆண்டுக் காணுந்தன்மையன் உரைக்குந்தன்மையர் என முறையே பொருள்படுதலின். 'சொலல்வல்லன் சோர்விலனஞ்சான்' என்னும் குறளுரையிற் பரிமேலழகரும் அஞ்சான் என்பதற்கு ஆக்கங்கொடுத்து 'அஞ்சானாயினன்' எனக்கூறியதுகாண்க.

வினைக்குறிப்பும் இவ்வாற்றான் இயற்கைவினைக்குறிப்பென்றும் ஆக்கவினைக்குறிப்பென்றும் இருவகைப்படுமாறு அறிந்துகொள்க.

இனி ஆசிரியர் 'ஆக்கக்கிளவி காரணமுதற்றே', 'ஆக்கக்கிளவி காரணமின்றியும், போக்கின்றென்ப வழக்கினுள்ளே' எனவும் விதிகூறினமையால், முற்கூறியவாறு இயல்பு திரிந்து செயற்கைப்பொருளாதற்கொருகாரணமும்வேண்டுமென்றே. அக்காரணச்சொல்லை முன்னாகப்பெற்றுவரும் ஆக்கச்சொல்லென்பதாயிற்று. செயற்கைப்பொருளெனவே காரியவாக்கப்பாடாயிற்று. அக்காரியவாக்கப்பாட்டிற்கு

முன்னரே காரணமுண்மையின் அக்காரணச்சொல்லை முற்கூறி ஆக்கச்சொல்லைப் பிற்கூறுதல் இலக்கணநெறி என்பார் 'காரணமுதற்றே' என்றனர் போலும். எனவே, நீர் வெய்யதாதற்கும் நறுமணமுடைத்தாதற்கும் காரணம் தீயின்கலப்பும் (சம்பந்தமும்) மலரின்கலப்புமாதலால் 'தீக்கலந்தமையின் நீர் வெய்யதாயிற்று' 'மலர்கலந்தமையின் நீர் நறுமணமுடைத்தாயிற்று' என்று கூறல்வேண்டுமென்பதாயிற்று. அவற்றிற்கு அவைகாரணமாதல் 'தன்னியல்பொழியப் பூவுந்தழலும்வந்தணையநீரின், மன்னியதிரண்டுசெய்தி' என்னும் சிவஞானசித்தியாரானும் அறிக. 'வருமழைய வாய்க்கொள்ளும் வாடாச் சீர் வண்கைக், கருமுருகன் சூடிய கண்ணி - திருநுதால், இன்றென் குறற்கூந்தற் பெய்தமையாற் பண்டைத்தன், சாயல வாயின தோள்' இச்செய்யுளுள்ளே செயற்கைப்பொருள் ஆக்கமும் காரணமும் பெற்றுவந்தது காண்க. இக்காரணச்சொல் மூன்றனுருபாதல் ஐந்தனுருபாதல் ஏற்ற பெயர்ச்சொல்லாகவருதல் பெரும்பான்மை; பெய்தமையால்', 'கலந்தமையின்' என. இக்கருத்து 'மூன்றனு மைந்தனுந் தோன்றக் கூறிய, ஆக்கமொடு புணர்ந்த ஏதுக் கிளவி' என்னுஞ் சூத்திரத்தானும் தெளிந்துகொள்ளப்படும்.

சிறுபான்மை காரணச்சொல் தனிவாக்கியமாகக் காணப்படும்; 'தீக்கலந்தது நீர் வெய்யதாயிற்று' என்புழிப்போல. இதனுள் 'தீக்கலந்தது' என்பது காரணம். அதன்மேல் 'அதனால்' என்னும் சொல் வருவித்துரைத்துக்கொள்ளப்படும், 'தீக்கலந்தது அதனால் நீர் வெய்யதாயிற்று' என. 'முன்னுள்ளுவோனைப் பின்னுள்ளினேனே, ஆழ்கென்னுள்ளம்' என்னும் புறப்பாட்டினுரையில் 'முன்னுள்ளுவோனைப் பின்னுள்ளினேன்' என உள்ளம் ஆழ்தற்குக் காரணம் கூறினர் என்று அதனுரையாசிரியரும், 'அறவினையாதெனிற் கொல்லாமை' என்னும் குறளுரையில் 'கோறல் பிறவினையெல்லாந் தரும்' என்பது ஏது (எதிர்மறைமுகத்தாற்கூறியவாறு) என்று பரிமேலழகரும் கூறினர்.

'நாடியபொருள்கைகூடுஞானமும்புகழுமுண்டாம்' என்னும் கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தரவிருத்தியுள்ளே 'கைகூடுதலானென எடுத்துமுடிக்க; முடிக்கவே 'செயற்கைப்பொருளை ஆக்கமொடுகூறல்.' 'ஆக்கந்தானே காரணமுதற்றே' என்னும்

விதிபெற்று உண்டாம் என ஆக்கமொடுகூறப்பட்டுக் காரணமுதற்ருய் வந்தவாறு காண்க' என்று விளங்கக்கூறினர் சிவஞானமுனிவரும். அதனுல் அவ்வியல்பறிந்துகொள்க.

இனி 'அரனடிக் கன்பர்செய்யும் பாவமும் அறமதாகும்' என்புழி 'அரனடிக்கன்பர்' என்பது காரணக்குறிப்புச்சொல்லாம். 'தெரிகணை யெஃகந் திறந்தவா யெல்லாம், குருதி படிந்துண்ட காகம் உருவிழந்து, குக்கிற் புறத்த சிரல்வாய செங்கண்மா, றப்பியா ரட்ட களத்து' என்புழிக் 'குருதிபடிந்துண்டகாகம்' என்பதும் அது.

உரையாசிரியர் பரிமேலழகரும் 'அந்தணரென்போரறவோர்' என்புழி 'அந்தணர்' என்பதும், 'சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி' என்புழிச் 'சேர்ந்தாரைக்கொல்லி' என்பதும், 'நல்வினத்தி ஞாஉங்குத்துணையில்லை' என்புழி 'அல்லற்படுப்பது' என்பதும், 'கடனென்ப நல்லவையெல்லாம்' என்புழிச் 'சான்றுண்மைமேற் கொள்பவர்' என்பதும் ஏதுப்பெயரென்றுகூறியவாறு காண்க. 'இர வாரிரப்பார்க்கொன்றீவார்' என்புழிக் 'கைசெய்தூண்மாலையவர் என்றது ஒருஞான்றும் அழிவில்லாதசெல்வமுடையவர் என்னும் ஏதுவை உட்கொண்டுநின்றது' என்றவாறும் அது.

சிவஞானமுனிவரும், 'ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தி யில்லை' (சிவஞானபோதம். சூ. 1.) என்புழி 'ஆண்டு ஒடுங்குதலின்' என்று எடுத்துக்கொண்டு 'ஒடுங்கின' என்பதனுற்போந்த குறிப் பேதுவைப் புலப்படக்காணுமாறு இது எனவும், 'இலயித்ததன்னில்' என்புழி 'இலயித்தது' என்பது ஏதுப்பொருண்மையுணரநின்ற பெயர்' எனவும், 'உளதிலதென்றலின் (சூ. 3) என்புழி 'மாயாவியந் திரதனு' என்பதனுற் பெறப்படும் குறிப்பேது எனவும், 'அறியவிரண் டல்லன்' (சூ. 6) என்புழி 'அறிவுக்குக் காட்டாகின்ருன்' என்னும் பெயராடையானும் ஓர் ஏதுக்கூறியவாறு எனவும், 'அன்றன்றென நின்று' என்புழித் 'தற்பரம்' குறிப்பேதுவாய் நின்றபெயர் எனவும், இவ்வியல்புவிளங்க உரைத்தவாறு கண்டுகொள்க.

இனி, 'அரிய கானஞ் சென்றோர்க், கெளிய வாகிய தடமென் றோளே' என்புழியும், 'நல்லவையெல்லாந்தீயவாந்தீயவு, நல்லவாஞ் செல்வஞ்செயற்கு' என்புழியும், செயற்கைப்பொருள் காரணமின்றி

வந்ததெனக் கொள்ளாமோவெனிற் கொள்ளாம். அவற்றின் முறையே களவுகாலத்தரியன கற்புக்காலத்தெளியவாயின என்பது கருத்தாக லான் அக்கற்புக்காலம் காரணமென்பது பெறப்படுதலானும், நல்லவை தீயவாதற்கும் தீயவைநல்லவாதற்கும் ஊழ்காரணமென்பது பெறப் படுதலானும் 'கற்புக்காலத்தான்' 'ஊழான்' என்னுஞ் சொற்கள் வருவித்துக்கொண்டுரைக்கப்படுமாகலான் என்க. மேற்காட்டிய 'முன்னுள்ளுவோனைப் பின்னுள்ளினேனே' என்னும் புறப்பாட்டி னுரையாசிரியர் 'முன்னுள்ளுவோனைப் பின்னுள்ளினேன்' என உள்ளம் ஆழ்தற்குக் காரணம் கூறினமையாற் பிறரைப்புகழ்ந்தநாவெ னவும் பிறர்புகழ்கேட்ட செவியெனவும் ஏனையவற்றிற்கும் காரணம் வருவித்துரைக்கப்பட்டது என்றது காண்க. ஆகவே இங்ஙனம் பலவாறாகவரும் காரணச்சொல்லியல்பெல்லாம் உய்த்துணர்ந்து கொள்க.

இனித் 'தெரிகணையெஃகந்திறந்தவாயெல்லாங், குருதிபடிந் துண்டகாக-முருவிழந்து, குக்கிற்புறத்தசிரல்வாய' என்புழிச் செயற் கைப்பொருள் ஆக்கமின்றிவந்ததெனவும் கொள்ளாம். குருதிபடிந் துண்டகாகமாதலின் (காகம் குருதிபடிந்துண்டமையால்) குக்கிலின் புறத்தவாயின சிரலின்வாயவாயின என ஆக்கச்சொல்லும் அக் கார ணச்சொற்போலவேவருவித்துக்கொண்டுரைக்கப்படுமாகலான்என்க. இவ்வாக்கச்சொற் செய்யுள்விகாரத்தாற் றொக்கதென்பாருமுளர்.

இனி, 'மருந்துண்டு நல்லன்' என்புழி உண்டு என்னும் வினை யெச்சம் நல்லன் என்னும் வினைக்குறிப்புமுற்றைக்கொண்டுமுடிந்து காரணகாரியப்பொருள்பட வருமிடத்து, அது 'மருந்துண்டமையால் நல்லன்' என்பதனோடு பொருளால் ஒத்துச் செயற்கைப்பொருளா தலால் 'செயற்கைப்பொருளை ஆக்கமொடு கூறல்' என்னும் விதி யெய்தி 'மருந்துண்டு நல்லனாயினான்' என ஆக்கம்பெற்று வருதல் வேண்டுமென்னுங் கருத்தால் ஆசிரியர் 'வினையெஞ்சு கிளவிக்கு வினையுங்குறிப்பு, நினையத்தோன்றிய முடிபாகும்மே' என்னுஞ் சூத் திரத்து 'ஆவயிற் குறிப்பே ஆக்கமொடு வருமே' என்று ஓதினர். ஆகவே அது 'செயற்கைப்பொருளை ஆக்கமொடுகூறல்' என்னுஞ் சூத்திரத்தோடுமாட்டெறிந்தவாறே உய்த்துணர்ந்துகொள்ளப்படும்.

மாட்டேற்றியல்பு இதுவாமாறு சிவஞானபோதமாபாடியத்து அவை யடக்கத்துச் சிவஞானமுனிவர்கூறியவாற்றானும் உணர்க. 'ஆடூஉ வரிசொல்' என்னுஞ்சூத்திரத்துரையுட் சேனாவரையர் 'சிவணி உயர் திணையவாம்' என ஆக்கம் வருவித்து முடித்துக்காட்டியவாறும் அதுபற்றியென்க.

அச்சூத்திரத்திலே 'வினையெஞ்சுகிளவிக்கு' எனவும், 'வினையுங் குறிப்பும்' எனவும் பொதுப்படக்கூறியவதனால் மேற்காட்டியவாறு செய்தென்வாய்பாட்டுவினையெச்சம் வினைக்குறிப்புமுற்றைக் கொண்டுமுடிந்தவழியேயன்றித் 'தீவந்தணைய நீர்வெய்து' எனச் செயவென்வாய்பாட்டுவினையெச்சம் வினைக்குறிப்புமுற்றைக் கொண்டுமுடிந்து காரணகாரியப்பொருள்படவருவழியும் ஆக்கம் பெற்றுத் 'தீவந்தணைய நீர் வெய்தாயிற்று' என வருதலும், 'மருந் துண்டு நல்லன் எழுந்தான்' என நல்லன் என்னும் முற்றாய்த்திரிந்து நின்றவினையெச்சக்குறிப்பு மேல்வரும் எழுந்தான் என்னும் வினை முற்றைக்கொண்டுமுடிந்து அப்பொருள்படவருவழியும் ஆக்கம் பெற்று 'மருந்துண்டு நல்லனாய் எழுந்தான் என வருதலும் கொள் ளப்படும். அது பொதுப்படக்கூறியதென்பதே ஆசிரியர் சிவஞான முனிவர்க்குங் கருத்தாதல் அவர் முதற்சூத்திரவிருத்தியுள்ளே 'சார்ந்து' என்னும் வினையெச்சத்தை வரல் என்னுந் தொழிற்பெயரின் வா என்னும் முதனிலையோடுமுடித்துக்காட்டி 'வினையெஞ்சுகிளவிக்கு வினையுங்குறிப்பும்' என்புழி ஆண்டு வினையென்றது முதனிலையுரிச் சொல்லேயாகலின் விகுதி யெவ்வாற்றான்வரினும் அஃதுபற்றி ஆராய்ச்சிவேண்டா' வெனக்கூறியவாற்றான் விளங்கும். எனவே ஆக்கவினைக்குறிப்பாயின் முற்றாயினும் எச்சமாயினும் ஆக்கச்சொல் வந்தாலன்றிப் பொருளுணர்த்தாதென்பது முடிந்ததென்க. நச்சி னார்க்கினியரும் இவ்வாறு உரையுட் கூறினர். நன்னூலாரும் 'ஆக்க வினைக்குறிப்பாக்கமின்றியலா' என்றொரு சூத்திரங்கூறினர்.

'தக்கோரினத்தனாய்', 'குணனிலனாய்', 'எல்லாப்பொருளு முடைத்தாய்' 'அளவறிந்து...... இல்லாகி' (குறள்) என்புழி வினை யெச்சக்குறிப்புமுற்று ஆக்கச்சொற்பெற்றுவந்தது காண்க.

'எண்பதத்தான்' 'சொலல்வல்லன்சோர்விலன்' 'பெருங்கொடை யான்' 'காட்சிக்கெளியன்' என்புழி வினையெச்சக்குறிப்புமுற்றுக்கு உரையாசிரியர் பரிமேலழகர் ஆக்கச்சொல்வருவித்துரைத்ததுகாண்க.

'கருநாய்கவர்ந்தகாலர் சிதைஇயபானையர், பெருநாடுகாண விம்மையிலே பிச்சைதாங்கொள்வர்' என்பதனை 'இரும்பார்க்குங் காலராய்' 'ஏதிலார்க்காளாய்' 'சேனைத்தலைவராய்' என்புழிப்போல ஆய் என்னுஞ் சன்கொடுத்து விரவாவினையெச்சமாக்குவர் என்று பிரயோகவிவேகநூலார் கூறியதும் இக்கருத்தேபற்றியென்க.

அற்றேல் இலக்கணக்கொத்துநூலார் 'கருநாய்கவர்ந்தகாலர் சிதைஇயபானையர்' என்புழி ஆய் எனப் பொருள்கொள்ளுதல் வினையெச்சமானது வினைக்குறிப்புமுற்றாய்த் திரிந்தது எனவும் மொழி வருவித்தலென்னும் இலக்கணமன்றெனவும் கூறியவாறென்னையோ வெனின், அவர் வினையெச்சம் முற்றாய்த்திரிந்ததென்பது ஒன்றே பற்றி ஆண்டு ஆராய்ந்தாரன்றி, அஃது ஆக்கவினைக்குறிப்பாதல் பற்றி ஆராய்ந்தாரல்லர். ஆகலின் அவர்க் கது கருத்தன்றென்க.

'மருந்துண்டுநல்லன்' என்புழி நல்லன் என்பது வினைக்குறிப்பு முற்றாகநின்றவிடத்து ஒருதலையாகவரும் ஆக்கச்சொல் மற் றதுவே எச்சமாய்நின்றவிடத்தும் வருதல் தடைப்படுமாறு யாங்ஙனமென்க. ஆண்டு 'ஆக்கமொடு' என்று பொதுப்படவே கூறினர். இதுவே நச்சினார்க்கினியர்க்குங் கருத்தாதல், 'மாமனுமருகனும்போலுமன்பின' என்னுஞ் சிந்தாமணியுரையுள் 'அன்பின' 'காட்சிய' 'மோட்டின' என்னும் வினையெச்சக்குறிப்புமுற்றுக்களுக்கு ஆய் என்னுஞ் சொல் வருவித்துரைத்து, 'ஆவயிற்குறிப்பே ஆக்கமொடுவருமே' என்பதனால் ஆக்கம் வருவித்துரைக்கப்பட்டது என்று இலக்கணம் விளங்கக்கூறியவாற்றான் அறிக. அல்லதூஉம், (ஆக்க) மொழிவரு வித்துரைத்தலே ஆசிரியர்கருத்தாதல் 'கூறல்' 'வருமே' என்னுங் கூற்றுக்களாற் பெற்றாமென்க.

ஆகவே, வினைக்குறிப்புச்சொல்லின் நிலைமையெதுவோ அதற் குத்தகவே ஆக்கச்சொல்வருமென்பது துணியப்படுதலின், சொல்லி லக்கணவாராய்ச்சியெல்லாம் வினைக்குறிப்புச்சொல்லின்கண்ணதே யாம். ஆக்கச்சொற்பற்றி வேறுகூறல்வேண்டா, அது வருவித்

துரைக்கப்பட்டதென்பதன்றி. 'குறிப்பு—முடிபாகும்மே' என்றத னால் வினைக்குறிப்புச்சொல்லே ஆண்டு முடிக்குஞ்சொல்லாமென்ப தும், 'ஆவயின்-வருமே' என்றதனால் ஆக்கச்சொல்வருதல் பொரு ளுணர்த்தற்கென்பதும் போந்தவாறு காண்க. இன்னும் அதனானே அவ்வினைக்குறிப்புச்சொல் ஆக்கச்சொல்வரப்பெற்று ஒருசொன்னீர் மையதாய்நின்று வேண்டுழிச் சொல்லிலக்கணங்கூறப்பெறுமென் பதூஉமாயிற்று. 'குணனிலனாய்க் குற்றம்பலவாயின்' என்னுங் குறளுரையிற் பரிமேலழகரும் 'குணனிலனாய் என்னுஞ் செய்தெனெச் சம் உடையவென வந்த பெயரெச்சக்குறிப்புக்கொண்டது' என்று உரைத்தவாறுகாண்க.

அற்றேல், இத்தன்மைத்தாயசொற்பற்றி இலக்கணங்கூறப் புகும் உரையாசிரியர்கள் அஃது வினையெச்சக்குறிப்புமுற்றென்றாக, ஆக்கம்வருவித்துரைக்கப்பட்டதென்றாக, யாண்டும் ஒருவழக்கே கொண்டு உரைக்கத்தகும். அவ்வாறன்றி இருவழக்குங்கொண்டு ரைத்தல் எற்றுக்கெனின், அவர் சொல்லியல்புகருதியவழி 'வினை யெஞ்சுகிளவியும்வேறுபல்குறிய' என்னுஞ் சூத்திரக்கருத்துப்பற்றி வினையெச்சக்குறிப்புமுற்றென்றும், சொற்றொடர்பியல்பும் பொருளி யல்பும் கருதியவழி 'வினையெஞ்சுகிளவிக்குவினையுங்குறிப்பும்' என் னுஞ் சூத்திரக்கருத்துப்பற்றி ஆக்கச்சொல்வருவித்துரைக்கப்பட்ட தெனவும் கூறுவராகலின் அதுபற்றிக் கடாவென்னையென் றொழிக. பரிமேலழகரும் இருவழக்குங்கொண்டுரைத்தமை காண்க.

'ஆக்கமொடு' என்று பொதுப்படக்கூறியவதனாலே, ஆக்கச் சொல் ஆயினான் ஆய் என முற்றும் செய்தெனெச்சமுமாகவேயன்றி ஆக ஆகிய ஆதல் ஆவது எனச் செயவனெச்சமும் செய்தவெனெச் சமும் தொழிற்பெயரும் வினையாலணையும்பெயருமாகவருதலுங் கண்டுகொள்க.

இத்துணையுங் கூறியவாற்றால் ஆக்கச்சொல் வியல்பெல்லாம் அறிந்துகொள்ளப்படும். ஆகவே, இவ்வரிய இலக்கணம்பற்றிச் செய்யுளுட் கூறப்பட்டது இயற்கைப்பொருளோ செயற்கைப்பொரு ளோவென்று நுட்பமாக ஆராய்ந்து, செயற்கைப்பொருளாயவிடத்து ஆக்கச்சொல் அடுத்துவாராவிடின், அவ்விடத்தெல்லாம் அதனை

வருவித்துரைத்தல் உரையாசிரியர்க்குக் கடனாயிற்று. ஆகவே தெய்வத்திருக்குறளுக்கு உரைவிரித்துச்செல்லும் பரிமேலழகர் 'செப்பமுடையவனுக்கஞ்சிதைவின்றி, யெச்சத்திற்கேமாப்புடைத்து' என்புழிக் கூறப்பட்டது செயற்கைப்பொருளாதல் கண்டார், ஆண்டு அஃது ஆக்கமொடு கூறப்படாமையால் அதனைவருவித்து 'ஏமாப்பாதலுடைத்து' என்று கூறினர் என்க.

(தொடரும்.)

பிழை திருத்தம்.

செந்தமிழ் கக-ஆம் தொகுதி கக-ம் பகுதியில் ருஎக-ஆம் பக்கம் ரு-ஆம் வரியில் 'வருதலின்றிப்' என்பதற்கும், 'பொச்சாந்தவன்' என்பதற்கும் இடையே 'பொச்சாந்தான், பொச்சாந்து, பொச்சாந்த, பொச்சாத்தல்' என்பவற்றைச் சேர்த்தும், உச-ஆம் வரியில் 'பற்றுவிடும்' என்பதனைப் 'பக்குவிடும்' எனத் திருத்தியும் படிக்க.

ம. நா. சோமசுந்தரம்பிள்ளை.

நச்சினார்க்கினியர்.

(கo-ம் தொகுதியின் ருசுகூ-ம் பக்கத் தொடர்ச்சி.)

—:(o):—

முன்பகுதியிற் கூறப்பட்ட கபர்த்திகாரிகைச் சுலோகப்பிரயோகத்தாலும், பகவத்கீதை, சிரௌதமுதலிய அரியநூல்களின்பிரயோகத்தாலும், *"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்ற ஒன்பதுஅடிகளாலாகியசூத்திரத்துக்கு வேதம் வேதாங்கம் ஸ்மிருதி இதிகாசம் முதலிய வடமொழிநூல்களின் நுட்ப அறிவைக்கொண்டு பத்துப்பக்கங்களடங்கிய விரிவானஉரையாலும், சீவகசிந்தாமணி முத்தியிலம்பகம் "தெளிவறுத்தெழுவர்பட்டார்" என்ற 478-ம் செய்யுளுரையில் "எழுவரென்பது அநந்தானுபந்திக்குரோதம், அநந்தானுபந்திலோபம், 'மித்தியாத்துவம், சம்மியக்மித்தியாத்துவம்,

* தொல்: புறத்திணையியல்: 75-ம் சூத்திரம்.

சம்மியத்துவம்" என்ற சாஸ்திரக்கொள்கைகளை 'கருமஸ்வரூபம்' என்னும் நூலிலிருந்து எடுத்தாளுவதாலும், "வடநூலாசிரியர் ஆறுவகைப்பிரத்தியங்களான் எழுத்துக்களைக் குருவும் இலகுவுமென இருகூறுசெய்து உறழ்ந்து பெருக்கிக்காட்டுவதோர் ஆறுமுண்டு. அவரும் இருபத்தாறு எழுத்தளவும் உறழ்ந்துகாட்டி ஒழிந்தன ஞெகிழ்ந்துபோவர்" என்று கூறியதாலும், இன்னும் பல அரிய வடநூற்பிரயோகங்களாலும் நம்மாசிரியர் வடமொழிவல்லுநர் என்பது நன்குவிளங்கும்.

மேற்கூறிய கர்மஸ்வரூபநூற்பிரயோகத்தால் நம்மாசிரியர் கர்மகாண்டநூலுணர்ச்சியுள்ளவரென்பதும், "ஏந்தெழின்மார்ப" என்ற கலித்தொகை 96-ம்கலிக்கு எழுதிய நட்பவுரையால் அசுவசாஸ்திரப் பயிற்சியுள்ளவரென்பதும், சீவகசிந்தாமணி காந்தருவதத்தையாரிலம்பகம் முதற்செய்யுளுரையாலும் அதேஇலம்பகம் 128-ம்செய்யுளுரையில் சந்திராபரணம் என்னும் சோதிடநூற்பிரயோகத்தாலும் சினேந்திரமாலைச்செய்யுட்பிரயோகத்தாலும் வானசாஸ்திரம் சோதிடசாஸ்திரங்களின் உணர்ச்சியுடையவரென்பதும், சீவகசிந்தாமணி பதுமையாரிலம்பகம் 122-ம் செய்யுளுரையில் விஷஹாஹஸ என்ற நூலைக் குறிப்பிட்டிருப்பதால் சித்திராரூடம் என்ற ஆரூடசாஸ்திரம் அறிந்தவரென்பதும், சீவகசிந்தாமணி காந்தருவதத்தையாரிலம்பகம் 116, 165, 180, 183 செய்யுள்களினுரைகளால் சங்கீதம், பரத முதலிய சாஸ்திரப்பயிற்சியுடையவரென்பதும், சீவகசிந்தாமணி காந்தருவதத்தையாரிலம்பகம் 131-ம் செய்யுளுரையாலும் குறிஞ்சிப் பாட்டில் 80-க்கு மேற்பட்டபூக்களினியல்பை நன்குவிளக்கி எழுதிப் போந்த அரியஉரையாலும் ஒஷதிசாஸ்திரம் நன்குணர்ந்தவரென்பதும் தெளிவாகும். கஜசாஸ்திரத்தையும் சிந்தாமணியுரையிற் குறிப்பித்திருக்கின்றனர்.

இவைநிற்க. "இனிச் சித்தன்வாழ்வென்றுசொல்லுகின்றவூர் முற்காலத்து ஆவினன்குடியென்று பெயர்பெற்றதென்றுமாம்." (பத்துப்பாட்டு பக்கம் 27)

"அவருள் உழுவித்துண்போர் மண்டிலமாக்களுந் தண்டத்தலைவருமாய்ச் சோழநாட்டுப் பிடவூரும் அழுந்தூரும் நாங்கூரும் நாவூரும் ஆலஞ்சேரியும் பெருஞ்சிக்கலும் வல்லமும் கிழாரும் முதலிய

பதியிற்றோன்றி வேளெனவும் அரசெனவும் உரிமையெய்தினோரும், பாண்டியனாட்டுக் காவிதிப்பட்டமெய்தினோருங் குறுமுடிகுடிப்பிறந் தோர்முதலியோருமாய் முடியுடைவேந்தர்க்கு மகட்கொடைக்கு உரிய வேளாளராம்'' (தொல்: பொருள்: அகத்: 30-ம் சூத்திரஉரை) "ஏரகம் = மலைநாட்டகத் தொருதிருப்பதி" (பத்துப்பாட்டு பக்கம் 29) இவற்றால் இவர் தமிழ்நாட்டுப் பூகோளசாஸ்திரம் நன்கறிந்தவர் என்பது புலப்படும்.

சுருங்கக்கூறில் நம்மாசிரியர், நான்குவேதம் ஆயுசாஸ்திரம் அறுபத்துநான்குகலைக்ஞானம் இதிகாசங்கள் புராணங்கள் முதலிய அரியநூல்களில் நுட்பஆராய்ச்சியுள்ளமூதறிஞர் என்றுகூறுவது சாலப்பொருத்தமேயாகும்.

ஆங்கிலத்தில் டிரேன்ச் என்ற ஆசிரியர் எழுதியிருக்கும்வண் ணம் சிற்சிலதமிழ்மொழிகளைச் சாமர்த்தியத்துடன் விளக்கிக்காட்டி யிருக்கின்றனர். உதாரணம்:—

"நம்பி—நம் முதனிலையாக நமக்கு இன்னானென்னும் பொருள் படவருவதோர் உயர்ச்சிச்சொல்."

வேலூர். "நல்லியக்கோடன் தன்பகைமிகுதிக்கஞ்சி முருகனை வழிபட்டவழி அவன் இக்கேணியிற் பூவைவாங்கிப் பகைவரையெறி யென்று கனவிற்கூறி அதிற் பூவைத் தன்வேலாகநிருமித்ததோர் கதை கூறிற்று. இதனானே வேலூர் என்று பெயராயிற்று" (பத்துப் பாட்டு 86-ம் பக்கம்).

நம்மாசிரியருக்குமுன் பிரசித்திபெற்ற உரையாசிரியர்கள் இளம் பூரணர், சேனாவரையர், கல்லாடர், பேராசிரியர், பரிமேலழகர், அடியார்க்குநல்லார், ஆளவந்தபிள்ளையாசிரியர் முதலியோர்களே. அவர்களில் இலக்கணத்துக்கும் இலக்கணப்பகுதிகளுக்கும் உரை எழுதியவர் சிலர். இலக்கியத்துக்குமட்டும் உரையெழுதியவர் சிலர். இலக்கியம் ஒன்றுக்கும் இலக்கணப்பகுதிகள் சிலவற்றிற்கும் உரையெழுதியவர் பேராசிரியர். நம் பேருபகாரியோ அரியஇலக்கணம் ஒன்றுக்கும் இலக்கியங்களிற் கடினமான பலநூல் களுக்கும் உரையெழுதிப் புகழ்பெற்றனர்.

நன்னூல்விருத்தியுரையெழுதிய சங்கரநமச்சிவாயப்புலவர் நன்னூல் 339-ம் சூத்திரஉரையில் "இங்ஙனம்வருஞ்செய்யுட்கெல்லாம் நச்சினார்க்கினியர், சேனாவரையர், பரிமேலழகர், உரையாசிரியர் முதலாயினார் முற்றும், எச்சமாயும் பொருளுரைக்கின் வழுவாமென்று கருதி வியங்கோட்பொருட்டென்றும், விதிப்பொருட்டு என்றும், தகுதிப்பொருட்டு என்றும், வேண்டும் என்றும், தமக்குவேண்டியவாறே பொருள் எழுதிச் சொற்குணம்வாளாபோயினர்" என்று கூறியுள்ளார். இதில் நச்சினார்க்கினியரையே முதற்கண்வைத்துக் கூறியது உய்த்துணரற்பாலது. பலநூல்களுக்கு அரியஉரைஎழுதியவரென்றுகருதியே இச்சிறப்புச்செய்தனர்போலும்.

தமிழில் உயர்நடைவசனநூல் இல்லாதகுறைவை நம்மாசிரியரது உரைகளே ஒருவாறுநீக்கலாயின எனக் கூறின் இயைபுடைத்தாம்.

நம்மாசிரியர் கம்பீரமும் தெளிவும் அழகும் சொற்செறிவும் வாய்ந்த செந்தமிழ்நடையெழுதுவதில் மிக்கசாமர்த்தியமுடையவர். தொல்காப்பியஉரையில் இவரது உயர்ந்தநடையைப் பலவிடங்களிற் பரக்கக்காணலாம். நடையழகுக்குக் கலித்தொகையிலிருந்து ஓர் அரிய உதாரணம் காட்டுவோம்.

"அகன்ற உலகத்தை எவ்வுயிர்க்குந்தோற்றுவிக்குந் தன்னுடைய பலகிரணங்களைத் தனக்குவாயாகக்கொண்டுகொன்றபகற்காலத்தை மீண்டும் அவ்வாயாலேவிழுங்கினாற்போல அவற்றைச் சுருக்கிக்கொண்டு படுகின்றசுடர் அத்தகிரியைச்சேர்கையினாலே போரின்கண்மிகுகின்ற சக்கரப்படையையுடைய மாயோன் நிறம்போல இயல்பாகவுள்ள இருள் பரந்துவாராநிற்க, அதனைப்பொறாதே தன் நிலவாலே ஓட்டிப் புறங்காண்பாரைப்போலே அழகினையுடைய மதிதோன்றக் கணவரைக்கூடித் துயில்பெற்றகண்கள்போலே திரண்டதண்டுகளையுடையவாகியதாமரைமுதலியனகுவியத் தம் புகழ்களைக் கேட்ட சான்றோரைப்போலே தலைசாய்ந்து மரங்கள்துயிலச் சிறுதூறுகள் பிரிந்தமகளிரை இகழ்ந்துசிரிப்பவைபோலே முகைகள் அவிழ்ந்துவிளங்கச் சிறிய மூங்கிலாகியகுழல்போலச் சுரும்புகள் ஆர்ப்பரவஞ்செய்துபாடப் புட்கள் தம்பார்ப்புக்களைநினைத்துக் குடம்

யைச்சேரப் பசுக்கள் தாம் தங்கும்ஊர்களிடத்திற் கன்றின்மேல் அமர்ந்தவிருப்பத்தோடே மன்றுகள்நிறையப் புகுதலைச்செய்ய, மாக்கள் தாம் தங்குமிடத்தேசென்றுதங்க, அந்தணர் தாஞ் செய்யுந் தொழில்களைச்செய்து அந்திக்காலத்தை எதிர்கொள்ள, மகளிர் செந்தீயால்உண்டானவிளக்கை ஏற்றத்தொடங்க, மாலை விளக்கங் கொள்ளவந்ததனை அறிவுகெட்டோர் வாலியஇழையிணையுடையமகளிர் உயிரை அதனைப்பொதிந்துநின்றஉடலினின்றும் போக்குங்காலத் தினது இயல்பாவதறியாராய் மாலைக்காலம் என்று அதுவும் ஒருகால மாகக்கூறுநிற்பர் என ஆற்றுளாய்த் தோழிக்குக்கூறினாள். (கலி. 199; பக்கம் 381.)

இவரது ஞாபகசக்தி மிகவும்வியக்கற்பாலது. உரையெழுதிக் கொண்டுபோகும்பொழுதே பலநூல்களிலிருந்து மேற்கோள்கள் தட்டுத்தடையின்றித் தாராளமாக எடுத்துச் சமயோசிதமாய் ஆளு வர். சந்தர்ப்பத்துக்குத்தக்கவண்ணம் ஆங்காங்கு ஒருசெய்யுளின் பகுதியையும், சிலஅடிகளையும், சிற்சிலசமயங்களில் முழுச்செய்யுளை யும் எடுத்துக்கூறுவார். தம் நடைப்போக்கிலே பல அரியபெரிய நூற்றொடர்களை அமைத்து அழகுசெய்வர். இவர் எடுத்தாளாத அரியநூல் தமிழிற் கிடையாது. மகாமகோபாத்தியாயர் வே. சாமிநாதையர்அவர்கள் சீவகசிந்தாமணிப்புதுப்பதிப்பில் எண்பது நூல்களின் பெயர்அட்டவணையை எடுத்தெழுதியிருக்கின்றனர். கடகண்டு, பல்காயம், மோதிரப்பாட்டு, வசைக்கடம்முதலியநூல் களின்பெயர்களை நாம் செவியாலுமுணர்ந்தோமில்லை. இவ்வரிய நூல்களெல்லாம் நம் நச்சினார்க்கினியர்க்கு உள்ளங்கைநெல்லிக்கனி. இவ்வரியபெரிய ஆசிரியரைத் தமிழ்ச்சாகரக்கரைகண்டவரெனக் கூசாமற்கூறலாம். இதுபற்றியன்றே இம்மகானை "உச்சிமேற்புல வர்கொள் நச்சினார்க்கினியர்" எனத் தமிழறிஞர் பாராட்டுகின்றனர்.

தமிழ்ப்பாஷையின்கண் இவருக்குள்ள அபிமானத்துக்கு வரம் பின்று; சிந்தாமணிக் காப்புச்செய்யுளுரையில் உலகம் என்றசெல்லைப் பற்றிஎழுதுங்கால்; "ஆசிரியர் 'கால முலகம்' என்று பிறாண்டுஞ் சூத் திரஞ்செய்தலின் அது வடமொழியன்று" எனக் கூறியவாற்றால் அது நன்குவிளங்கும்.

உரையாசிரியர்கள் சிறிது தவறிப்போனதாக இவரதுபுத்தியிற் பட்டால் சிறிதுங் கண்ணோட்டமின்றி அன்னவர்மதங்களைக்கண்டித்துத் தம்மதம்நிறுத்துவர். நன்னூலாரைப்பற்றிய இவர்கூற்றை முன்சஞ்சிகைபடித்த நண்பர்கள் அறிவார்கள்.

இம்மகானது சரித்திரஆராய்ச்சியால் நாம் அடையும்பயன் எவையெனின் நாம் நம் தாய்ப்பாஷையின்கண் மிக்கஅபிமானமுடையவர்களாயிருத்தல்வேண்டுமென்பதும், பல அரிய இலக்கிய இலக்கணநூல்களைக் கசடறக்கற்கவேண்டுமென்பதும், அவ்வாறு தமிழ்கற்பதற்கு வடமொழிநூற்பயிற்சி இன்றியமையாததென்பதும், நூற்பயிற்சியுடன் உலகநடையை நன்குஅறிந்தால்மட்டுமே அக்கல்வி சிறப்புறுமென்பதும், நம் அரியநூல்களைப் பொன்போற்போற்றிச் சமயம்வாய்க்குந்தோறும் தாராளமாய் எடுத்தாண்டு பயன்பெறச் செய்யவேண்டுமென்பதும், விஷயங்களை நுணுகியறிந்து உண்மை ஞானமடையவேண்டுமென்பதும் இன்னு மிவைபோன்ற அரியவிஷயங்களுமே.

இம்மகோபகாரியைத் தமிழ்மாணாக்கர்எவரும் ஏத்திப் போற்றி என்றும்மறவாமற் செய்ந்நன்றிபாராட்டி உச்சிமேற்கொள்வார்களாக.

இதிற்காணலாகும் குற்றங்களைந்து குணத்தைக்கொள்ளுதல் கற்றோர்கடனும். ஓம். சுபம்.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு"

இங்ஙனம்,

எஸ். சாமிநாதையர்.

இளம்பூரணம்.

தொல்காப்பியப் பாயிரவுரையில் ஆசிரியர்நச்சினார்க்கினியர் "இதற் கிங்ஙனங்கண்ணழித்த வுரையாசிரியர்கருத்தென்ப தவ்வுரை யானுணர்க" என்றும், "இனி யிவ்வாறன்றிப் பிறவாறு கண்ணழிவு கூறுவாருமுளராலெனின் வேங்கடமுங் குமரியு மெல்லையாகவுடைய நிலத்திடத்துவழங்குந் தமிழ்மொழியினைக்கூறு நன்மக்கள் வழக்குஞ் செய்யுளுமென்றால்..............அது பொருளன்மையுணர்க" என்றும் இரண்டிடத்தில் முறையே யெழுதியிருக்கின்றார். அச்சிட்ட எழுத்ததிகார இளம்பூரணருரையிற் பாயிரச்சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர்கூறியவாறு கண்ணழிவுகூறப்படவில்லை. 'இங்ஙனங் கண்ணழித்தல்' என்பதற்குச் சொற்களைக்கொண்டுகூட்டிக் கண்ணழித்தல் என்பது பொருளாகக் கொள்ளலாமெனின்—"இனி யிவ்வாறன்றிப் பிறவாறு கண்ணழிவுகூறுவாருமுளராலெனின்" என்றும் ஒரேசூத்திரவுரையிற்கூறியிருத்தலைநோக்குமிடத்து முறையே இருவர்மதங்களை நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டினரென்று ஊகிக்க வேண்டியிருத்தலின் அது பொருத்தமாகத் துணியக்கூடவில்லை. நச்சினார்க்கினியர் எடுத்துமறுத்த இரண்டாவது கொள்கையே இளம்பூரணத்திற் காணப்படுவது.

நூன்மரபு "மெய்யோ டியையினு முயிரிய றிரியா" என்னுஞ் சூத்திரவுரையில் "விளங்காய் திரட்டினா ரில்லைக் களங்கனியைக், காரெனச் செய்தாரு மில். என்பதேகாட்டினா ருரையாசிரியரும்" என்றார் நச்சினார்க்கினியர். எடுத்துக்காட்டிய விப்பகுதி இளம்பூரணத்தில் ஆண்டுக் காணப்படவில்லை.

மதுரைக்காஞ்சி "தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்-றொன்முது கடவுட் பின்னர் மேய-வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந" என்னும் அடிகட்குப் பொருளெழுதியவிடத்தில் "இராவணன் தென்றிசையாண்டமைபற்றித் தென்னவனென்றார்.......... இராவணனாதல், பாயிரத்துச்சூத்திரத்து உரையாசிரியர்கூறிய உரையானுமுணர்க" என்று நச்சினார்க்கினியர் எழுதியுள்ளார். இச்

செய்தியும் இளம்பூரணத்திற் காணப்படவில்லை. இவற்றால் உரையாசிரியரும், இளம்பூரணரும் இருவேறு உரையாளராவரென்று கருத நேருகின்றது.

ஆயின் இதுகாறும் அச்சிடப்பட்டுள்ள நூலுரைகளிலெல்லாம் உரையாசிரியர், இளம்பூரணர் என்னும் இருபெயரையுமுடைய ஆசிரியர் ஒருவரென்றே குறிக்கப்பட்டுளது. அதற்கிணங்கவே உரையாசிரியர்கொள்கையாக நச்சினார்க்கினியரெடுத்துமறுக்கின்றவைகளிற் பெரும்பாலன இளம்பூரணத்திற் காணப்படுகின்றன. உதாரணமாக நூன்மரபு உஎ-ம் சூத்திரம், மொழிமரபு கஎ-ம் சூத்திரம், புள்ளிமயங்கியல் உக-ம் சூத்திரம் இவற்றிற்கு இருவரெழுதியவுரைகளையுங் காண்க. அன்றியும் இளம்பூரணர், வேறு உரையாளர்யாரையும் எடுத்துக் கூறாமையானும், ஓரிடத்தும் பிறர்மதம் எடுத்துக் காட்டாமையானும் அவரே தொல்காப்பியத்திற்கு முதன்முதல் உரையெழுதினாரென்பது பெறப்படுகின்றது.

இன்னவேதுக்களால் உரையாசிரியரும் இளம்பூரணரும் இருவேறுரையாளரென்றுதல், இருபெயருமுடையாரொருவரே, அவருரையிற் சிலசிலபகுதிகள் எழுதினோரால் விடப்பட்டன வென்றுதல் கோடலமையும். ஏட்டுப்பிரதிமுதலிய சாதனங்களா லுண்மைகண்டு வைத்துளோர் வெளியிடுவாராக.

மு. வேங்கடசாமிநாட்டார்.

உ

பொச்சாப்பு மேமாப்பும்.

செ்ன்ற 'புரட்டாதிமாசிகச் செந்தமிழிலே மன்னார்குடிவாசராகிய ஸ்ரீமத்-நா. சோமசுந்தரம்பிள்ளையவர்கள் எழுதிப் பிரகடனஞ் செய்த "ஆக்கச்சொல்விளக்கம்" வினைப்பகுபதங்களைப் பரிசீலனஞ் செய்வார்க்கு வெகுநன்மை பயக்கும். திருக்குறளுரைப்பயிற்சியையும் விளக்கும்.

சுன்னாகம் ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்புலவரவர்களை "இருபெரு மொழியினும் நுண்மாணுழைபுலன் மிக்கார்" என்றுகூறிப் பின் பொச்சாப்பு, ஏமாப்பு என்பனவற்றிற்குப் புலவரவர்கள்கூறிய முடிப் புரையை மறுத்துரைக்கின்றனர். நுழைபுலனும் வேறுகின்றது.

பொச்சாப்பு, ஏமாப்பு என்பன தனிமொழிகள் எனவும், பொச்சம், ஏமம் என்பன இறுதிகெட ஆ என்னும் பகுதியோடும், அப்பால் விகுதியோடுஞ் சேர்ந்துநின்ற தொழிற்பெயர்களல்ல எனவுங் கூறுவர். பகுக்குங்காற் பயனிலவாகின்றனவா?

பொச்சாப்பு, ஏமாப்பு என்பனபோல மையாப்பு, விம்மாப்பு, அல்லாத்தல், அண்ணாத்தல் முதலியனவாய்ப் பலசொற்கள் தமிழ் நூல்களில் வருகின்றன. இவற்றின்முதனிலை விகுதிமுதலியவற் றோடுசேர்ந்து பொச்சாப்பர், பொச்சாந்து, ஏமாப்பர், ஏமாந்து, மையாப்ப முதலியனவாயும் வருகின்றன. இவ்வினைகளிலே முதனிலையாய்நிற்பது யாது? இவற்றின் ஈறுகள்கெடச் சேர்ந்தொன்றி நின்ற ஆ என்பதன்றி வேறு யாது? வேறு உளதாயின்; அதுதான் யாது? உறு என்னும் வினைப்பகுதி ஈறுபோன காமம், ஏமம், ஐயம் என்பவற்றோடு சேர்ந்தொன்றிக் காமுறல், காமுற்று, ஏமுறல், ஏமுற்று, ஐயுறல், ஐயுற்று முதலியனவாய்வருதலைக் கொள்ளல் பொருந்தாதா?

ஆனான், ஆகி, ஆகிய முதலியனபோல ஏம் முதலியவற்றோடு சேருங்காலும் ஏமானன், ஏமாகி, ஏமாகிய முதலியனவாக அது வரல்வேண்டுமெனின்; வினைப்பகுதிகள் புணர்ச்சியிலே பலவிகாரமும் நியதியின்றிப்பெறலால் அங்ஙனம் வரல்வேண்டும் என்னும் யாப்புறவு இன்றென்க. ஆ என்பது கு என்பதனோடு சேர்ந்து "ஆக்கரிய" என வரவில்லையா? ஈ, சீ, கல், புல் முதலிய பகுதிகளி னின்று ஈந்து, ஈத்து, சீத்து, சீக்க, கற்று, புல்லி என்பனவாதிய பலவகையும் வரவில்லையா? புல் என்பதினின்று புல்லி என வருமா? புற்று என வருமா? ஆ என்னும் பகுதி தனியே விகுதிகளோடுகூடி வரல்போலப் பெயர்ப்பின்கூடுங்காலும் வரவேண்டுமா? குறு என்னும் பகுதியினின்று குறுவாம் என்பதும், குற என்பதும் குற்றுவாம் என்பதும், குற்ற என்பதும் வரவில்லையா?

புலவரவர்கள் தாமியற்றிய "வினைப்பகுபதவிளக்கம்" என்னும் நூலிலே ஆகாரவீற்றுவினைப்பகுதிகளின் விகாரமும் பிறவும் விரித்துக் கூறினர். அவைகளை நோக்குக. மாறுகளைக் கூறுக. "ஆத்த வறிவினர்" என்புழி ஆத்த என்பதனையும் விரித்தனர்.

பரிமேலழகர் செம்மாப்பர், மையாத்தி, தலைப்பிரிதல் முதலியவைகளை ஒருசொல் என்றது தம்முள் ஒன்றுபட்டுநிற்குந் தன்மை நோக்கி என்க. அதுதானுஞ் சொல்லாதுசெல்லாரெனின்; செல்லலுமுண்டு. ஆகூழ், போகூழ் என்பவற்றின் பகுதிபுலப்படக்கூறினவர், சோகாப்பர், அல்லாப்பர் முதலியவற்றின்பகுதிகளை விரித்துக் கூறாத தென்னை? " மடிதற்று " " கடைக்கொட்கச்செய்தக்க " (வினைத்திட்பம்) " உடையார்முனேக்கற்று " என்புழித் "தற்று, கொட்க, ஏக்கற்று" என்பவற்றுக்குச் சொன்முடிபுகூறாததென்னை? தற்று, கொட்க என்பவற்றின் பகுதிகள் யாவை? ஏக்கற்று என்பது தனிமொழியா? தொடர்மொழியா? பகுக்கப்படுமா? படாதா?

" ஏமாப்புடைத்து " (நடுவுநிலை) ஆதல் என்பது வருவித்ததாயின்; பிறண்டுப்போலக் கிளந்துகூறாத தென்னை? ஏமாப்பு என்பது இட்டும், இட்டிடையும்போல ஏமம் என்னும் பொருளும் பயக்கும்.

தலைப்பிரிதலைப் பிரயோகவிவேகநூலார் பிரித்துக்கூறிய இலக்கணம் பொருந்துமா? பொருந்தாதா?

இங்ஙனம்,
ச. பஞ்சாக்ஷர ஐயர்,
யாழ்ப்பாணம்.

ஒருவினாவுக்கு விடை

வினா

அரியபெரியவிஷயங்களை எளிதின் யாவருமுணர விளக்குஞ் செந்தமிழ்ப்பத்திராதிபரவர்கட்கு அநேகவந்தனஞ்செய்து எழுதிக் கொள்ளும் விண்ணப்பம்.

நன்னூற்சிறப்புப்பாயிரத்துள் "அரும்பொருளைந்தையும் யாவருமுணர" என்பதன் விருத்தியுரையில் "இயற்றமிழை அரும் பொருளைந்தெனக் கூறினமையின், இந்நூலுட்கூறிய பொருள் யாப்பு அணிக ளென்னு மூன்றதிகாரங்களும் அக்காலத்துள்ளன போலும்" என எழுதப்பட்டிருக்கிறது. இதனால் நன்னூல் முடிவு பெற்றதெனவிளங்குகிறது. இவ்வுரை ஸ்ரீலஸ்ரீ சிவஞானசுவாமிகளாற் றிருத்தப்பட்டதென்று சொல்லுகின்றார்கள். அம்முனிவராலியற்றப்பட்ட தருக்கசங்கிரகவுரையில் "நன்னூன் முதலியவற்றின் இடையூற்றின் மிகுதிப்பாட்டான் முடிவுபெறின்று" என எழுதப் பட்டிருக்கிறதே. இதனால் நன்னூல் முடிவுபெறவில்லையென விளங்குகின்றது. இவை ஒன்றோடொன்று முரணுதலின்று. இவற்றுள் உண்மையுடையதெது? இவ்விஷயத்தைப்பற்றிய தங்கள் அபிப்பிராயத்தைச் செந்தமிழ்ப்பத்திரிகையில் விளக்கியெழுத வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
சிறியேன்,

பிரமாதீச ஹு
மாசிமீ உஎவ

சோ. வேலுச்சாமிக்கவிராயன்,
தேவிகோட்டை.

விடை

வினாவிற்காட்டியபடி நன்னூலின்முடிவுபேற்றைப்பற்றி அதன் விருத்தியுரைவாக்கியமும், தருக்கசங்கிரகவாக்கியமும் ஒருவரானெழுதியவாயினுமாக, வெவ்வேறிருவரானெழுதியவாயினுமாக, பொருளாற் றம்முண் மாறுபட்டிருத்தலால் அவை யொன்றற்கொன்று முரணுதலுடையனவாம்.

அவற்றுள், உண்மையுடைய தெதுவென விசாரிக்குமிடத்து அவற்றின் வன்மை மென்மைகளையும் பிறசான்றுயுள்ளவற்றையுங் கண்டு இன்னது வாய்மையுடையதெனத் துணியவேண்டும்.

மாறுபட்ட இரண்டுவாக்கியங்களின் வலியுணருமிடத்து அவற்றின் பொருள்விசேட முதலியவற்றால் வன்மை மென்மை சீர்தூக்கப் படும்.

வாக்கியப்பொருள்கள் முக்கியமென்றும், கௌணமென்றும் இருவகைப்படும். அவற்றுள், உணர்த்தக்கருதியெடுத்துக்கொண்ட பொருள் முக்கியப்பொருளாம். அதற் குபகாரமாகச் சொல்லப் படும்பொருள் கௌணப்பொருளாம். கௌண, முக்கியப்பொருள்களுண் முக்கியப்பொருளே வலியுடையதென்பது சத்தநூல்வழக்கு.

இங்கு முக்கியப்பொருள் யாது? கௌணப்பொருள்யாதென வாராய்வாம். தருக்கசங்கிரகவுரைவாக்கியம் "மங்கலம் இனிதுமுடிதற்குக் காரணமன்று, மங்கலங்கூறியவழியும் நன்னூன்முதலியவற்றின் முடிவுகாணாமையின்" என்பதாம். இங்கு மங்கலம், இனிதுமுடிதற்குக் காரணமன்று என்பதே பூருவபக்கத்தின் பிரதிக்ஞையாக உணர்த்தக்கருதி எடுத்துக்கொண்ட முக்கியப்பொருள். அதனை முடித்தற்குபகாரமாக, "மங்கலங்கூறியவழியும் நன்னூன்முதலியவற்றின் முடிவு காணாமையின்" எனக் கௌணார்த்தமான ஏதுக் கூறப்பட்டிருக்கிறது. ஆதலால் இங்கு நன்னூன் முடிவுபெறாமையைப்பற்றிப் பேசியிருப்பது குணார்த்தவாதமாயிருக்கிறது.

நன்னூன்முதலிய வென்றதனால் மங்கலங்கூறியவழியும் முடிவு பெறாத பிறநூல்களுமுண்மையால் அவற்றுள் யாதேனுமொன்றை யெடுத்துக்காட்டி, சொல்லக்கருதியபொருளை முடிக்கவுங்கூடுமாதலால் நன்னூலே சான்றாகவேண்டுமென்னும் நியமமின்று. ஆதலானிது சாதாரணமாயும் வேறு பிரமாணமின்றியும் வலியிலதாயிற்று. ஆகவே அதனை யங்கீகரித்து, "நன்னூன்முதலியவற்றி னிடையூற்றின்மிகுதிப்பாட்டான் முடிவுபேறின்று" என்னும் எதிர்மொழியும் விருத்தியுரையைநோக்க வலியிலதாகின்றது.

விருத்தியுரைவாக்கியம் "இந்நூலுட்கூறிய பொருள்யாப்பணிக ளென்னு மூன்றதிகாரங்களும் அக்காலத் துள்ளனபோலும்" என்பதே. இது நன்னூற்சிறப்புப்பாயிரத்துள்ள "அரும்பொருளைந்தையும்.........தருகென.........வகுத்தனன்"என்னும் வாக்கியத்துள்ள ஐந்தையும்வகுத்தனன் என்னும், உணர்த்தக்கருதியபொருளின் வேறல்லாத முக்கியப்பொருளுணர்த்தற் கின்றியமையாததாய் நன்னூலின் இயல்புணர்த்தல் காரியமாக எடுத்துக்கொண்ட பொருளையேபற்றிப் பேசுதலால் முக்கியப்பொருளுடையதாயும் அசாதாரணமாயும் பாயிரத்தைப்பிரமாணமாகக்கொண்டதாயு மிருப்பதுபற்றி வலியுடையதாயிருக்கிறது.

இம்மட்டிலேயே நன்னூலைப்பற்றிப்பேசிய தர்க்கசங்கிரகவாக்கியம் யாதார்த்தவாக்கிய விரோதமுள்ள குணார்த்தவாதமாகவும், விருத்தியுரைவாக்கியம் முக்கியார்த்தபோதகமாகவும் இருப்பதுபற்றி விருத்தியுரைவாக்கியமே வாய்மையுடையதாகின்றது.

அன்றியும் நன்னூல் ஐந்ததிகாரத்தால் முடிவுபெற்றதென்பதற்குப் பலசான்றுகளுங் காணப்படுகின்றன. அவற்றுள் முதலாவது: நன்னூற்சிறப்புப்பாயிரம். இது, "அரும்பொருளைந்தையும் யாவருமுணரத், தொகைவகைவிரியிற் றருகெனத்.............நன்னூற்பெயரின் வகுத்தனன்" என நன்னூல் செய்துமுடிந்தபிறகு சீயகங்கனவைக்களத்து நன்னூல்கேட்டகாலத் துடனிருந்துணர்ந்தபுலவராற் பிறிதொன்றுகூறக்கருதாது, நன்னூலியல்புகூறுதலே முக்கியப்பொருளாகக்கொண்டுபாடப்பட்டுச் சிறப்புப்பாயிரமாக நன்னூலுடன் சேர்க்கப்பட்டிருத்தலால் வாய்மைசான்ற சான்றாகின்றது.

இரண்டாவது: நன்னூற் பழையவுரையேட்டுப்பிரதிகளில் "பழையனகழிதலும்புதியனபுகுதலும்" என்னும் சொல்லதிகாரத் திறுதிச்சூத்திரவுரையின்தொடக்கத்தில் "இந்நூலிற்சொன்ன வைந்ததிகாரத்துக்குஞ் சிங்கநோக்காய்நிற்பதோர் புறனடையுணர்த்துதனுதலிற்று" என முன்னுரை யெழுதப்பட்டிருக்கிறது. இதனுட் சிங்கநோக்கென்றது நடுவுநின் றிருதலையுநோக்குதலாம். இவ்வுரையாசிரியர் இந்நூலின்பிற்பகுதியாகிய பொருள் யாப் பணியிலக்கணங்களைக் கண்கூடாகக் கண்டாலன்றி, 'ஐந்ததிகாரத்துக்கு மிது

புறனடைச்சூத்திரமெனக் கூறுராதலால் இவ்வுரைகாரர்காலத்து ஐந்ததிகாரத்தான்முடிந்தநன்னூல் முழுதுமிருந்து வழங்கப்பட்டுவந் திருக்கவேண்டுமென்பது வெளிப்படையாய்விளங்குகின்றது.

இவ்வுரை, வழக்கிலுள்ள விருத்தியுரையின் வேறாகிப் பவணந்தி முனிவர்காலத்தே யெழுதப்பட்டதென ஊகிக்கத்தக்க பழையவுரையா யிருக்கிறது. இவ்வுரையினகத்து "அரும்பொருளைந்தையும்" என் னும் பாயிரத்துக்கு உரையுரைக்குமிடத்தும் "எழுத்துச் சொற் பொருள் யாப் பணியென்னு மரியபொருளைந்தையும்"என்றே எழுதப் பட்டிருக்கிறது.

மூன்றாவது: பிள்ளைலோகாரியஜீயர் பெரியதிருமொழிப்பாயிர வுரையுள் "தமிழநன்னூற்றுறைகளஞ்சு" என்பதன்பொருளைவிளக்கு மிடத்து "திராவிடசாஸ்திரம் எழுத்து சொல் பொருள் யாப்பு அலங்காரம் என்கிற விலக்ஷணமான பஞ்சலக்ஷணத்தோடுகூடியிறே யிருப்பது" என முக்கியார்த்தத்தையெழுதிவிட்டுப் பின்னும், "தமி ழுக்கு எழுத்துமுதலான அஞ்சுலக்ஷணத்தைய மறுதியிடுவதான நன்னூலென்னு மொருசாஸ்திரமுண்டு; அத்தைச்சொல்லிற்றுதல்" என்றெழுதியிருக்கும் கௌணார்த்தகற்பனத்தாலும், நன்னூல் ஐந் ததிகாரத்தால் முடிவுபெற்றிருந்ததாகக் காணப்படுகிறது. இது நன் னூலைப்பற்றிப்பேசியது குணார்த்தவாதமாயிருப்பினும் இங்கு அசா தாரணமாகையாலும், இதற்கு வேறு யதார்த்தவாக்கியவிரோதமில் லாமையாலும் இதுவும் சான்றாதற்குரியதே.

இவற்றுள் நன்னூல்விருத்தியுரை நன்னூற்சிறப்புப்பாயிரவாக் கியமாகிய சத்தப்பிரமாணத்தையும், நன்னூற் பழையவுரையும், பெரியதிருமொழிச்சிறப்புப்பாயிரவுரையும் பிரத்தியக்ஷப்பிரமாணத் தையுங்கொண் டெழுதப்பட்டமையால் அவை பிரமாணமாத லுடையன.

தருக்கசங்கிரகவுரை தருக்கநூற்பொருளுணர்த்தலையே முக் கியமாகக்கொண்டமையால் அத் தருக்கநூற்பொருளுணர்த்துதலிற் பிரமாணமாவதல்லது பிறிதொன்றையுணர்த்துவதிற் பிரமாணமாவ தின்று. அன்றியும், "நன்னூல்.........முடிவுபேறின்று" என் அத னியல்புகூறியவாக்கியம் சாதாரணப்பொருள்பற்றிய குணார்த்தவாத மாகவும் பிரமாணவிருத்தமாகவுமிருப்பதால் வாய்மையுடையதன்று.

இவ்வாறு, கடவுள்வழிபாடே முக்கியப்பொருளாகக்கொண்ட புராணாதிகள் பூகோள ககோளாதிகளைக் கூறுமிடத்து அவை முக்கியப்பொருளன்மையால் ஆண்டு அவை பிரமாணமாவனவல்ல. ககோளாதிகளை முக்கியமாகக்கூறும் கணிதாதிநூல்களே அவற்றிற் பிரமாணமாவனவாம். உதாரணமாக அண்மையிற் சூரியமண்டலமும் சேய்மையிற் சந்திரமண்டலமுமுள்ளனவாகப் புராணங்கூறும். அதற்குமாறாக அண்மையிற் சந்திரமண்டலமும் சேய்மையிற் சூரியமண்டலமுமிருப்பனவாகக் கணிதநூல் கூறும். இவ்விடயத்திற் கணிதநூலே பிரமாணமாவதுபோல, நன்னூல் முடிந்துளதென்பதை முக்கியப்பொருளாகக்கொண்ட விருத்தியுரைமுதலியவையே யுண்மையுடையதெனக் கொள்ளத்தக்கது.

ஆதலால் "மங்கலங்கூறியவழியும் நன்னூன் முதலியவற்றின் முடிவுகாணாமையின்" என்ற தருக்கசங்கிரகவாக்கியம், நன்னூலின் பிற்பகுதி பிறந்திறத்தலும் பிறவாதிருத்தலும் இன்மையானொப்புமையுடைமையாற் பிறவாததாகவைத்துக்கூறியதெனக்கொள்க. அங்ஙனங் கூறினாராயினும் மங்கலங்கூறியவழியும் நன்னூல்போலப் பிற்பகுதியில்லாத சிலநூல்களின் முடிவுபேறுகாணாமையின் என்பதே கருத்தாகக்கொள்க. வாக்கியப்பொருள்பொருந்தாதவிடத்துக் கருத்துப்பொருளுரைத்துப்பொருத்துவதுமுறையென்பதை, பிருதிவிநாற்றமுடையது என்றவிடத்து நாற்றமுடையதென்பதற்கு "நாற்றத்தோடொருங்கிருக்கும் பொருண்மைக் கபரமானசாதியுடைமையென்பதே கருத்தாகலின்" என அத் தருக்கசங்கிரகவுரையாசிரியர்தாமே கூறியவாற்றானுணர்க. அன்றியும் மங்கலங்கூறியவழியும் முடிவுபேறின்றென்பது எவ்வாற்றானும் நன்னூலுக்கியைவதன்று. கூறியுள்ளதாகக் காட்டும் மங்கலங்களால் எடுத்துக்கொண்ட எழுத்துஞ் சொல்லும் இனிதுமுடிந்துள்ளமையாலும் மங்களத்தின் நியமப்பிறழ்ச்சிக்கு நன்னூல் காட்டாகமாட்டாது. அங்ஙனமாகவும், மங்கலங்கூறிமுடிவுபெறாததாய் உதாரணங்காட்ட மதிப்புடையநூல்கள் காணப்படாமையாலும், இறுதிப்பகுதியின்மையான் முடிவுபெறாததோடொப்புமையுடைமைபற்றியும் பொய்ப்பொருளென்று மறுக்கப்படும் பூர்வபக்கவாக்கியமாகவைத்துக் காட்டப்பட்டதெனக்கொள்க.

திரு. நாராயணையங்கார்,
பத்திராதிபர்.

உ

இராமநாதபுரம் அரசர்

மாட்சிமைதங்கிய

முத்துவிஜய ரகுநாத ராஜ

பாஸ்கர இராஜராஜேஸ்வர

சேதுபதியவர்கள்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் தலைவராக அமர்ந்தமைகுறித்துத்

தஞ்சைநகர்க்

கரந்தைத்தமிழ்ச்சங்கத்தார்

அளித்த

வாழ்த்துப்பத்திரம்

நிலைமண்டில ஆசிரியப்பா.

நிலவுநீர் வரைப்பின் நீணில மருங்கில்
உலப்புறு மடத்தான் உயிர்சோர்ந் துயிர்ப்பார்
அலைப்புறு மனத்தார் ஆர்வமீக் கூரத்
தெய்வக் குறளும் திருவா சகமும்
ஆதிய பழைய அருமைப் பனுவலின்
அறவுரை தெளித்து மறவினை தொலைத்துப்
பேதமை யென்னும் பெருநோ யகற்றி
அறிவுநனி தளிர்ப்ப ஆற்றும் பெற்றியும்,
தகையரும் பவிழ்த்துப் புதுமணம் பரப்பித்
தேன்றுளி தூற்றுந் திப்பிய தென்றலும்,
உருகுபாண் மிழற்றி உவப்பினை யூட்டும்
துணர்பூங் கொம்பின் வணர்வாய்க் குருகும்,
ஆதிய நலத்தாற் போதுற் றவர்தம்
இளைப்புந் தவிப்பும் இன்னிதின் நீக்கி
ஆற்றலும் வலனும் அளிக்கும் பெற்றியும்,
வாய்ந்து திகழுறூஉம் வளங்கொள் சிறப்பின்

தமிழகப் பெயரிய தண்ணிய தடஞ்சேர்
கன்னலின் இனிய கல்விப் பிரதம்
உவட்டெடுத் தோட உருகெழீஇத் தோன்றும்
செந்தா மரையெனுஞ் சேதுநா டதனில்
உவந்துசேர் திருவை ஒண்மணம் புரிந்து,
தன்கோல் நோக்கித் தங்கிய குடியினைச்
சாதியுங் குலமும் யாதுநோக் காது
பொதுவுற வெண்ணிப் பொற்புடன் போற்றிச்
செம்மையிற் றிரியாது செங்குடை நிழற்றி
வள்ளுவ நீதி வழாது முறைசெயும்
பொன்றாப் புகழின் பின்றாப் பீடோய்!
குறையா வன்பிற் புலவர்ப் பேணி
வரையா வீகை வண்மை சான்ற
தொல்லோர் மருக! துகளில் தோன்றல்!
உணங்கிப் புலர்ந்த ஒண்டமிழ்ப் பாதபம்
மென்றளிர் காட்டி இன்மலர் சொரிந்து
பொன்றாது பரப்பிப் புண்ணியம் நிழற்றக்
காரென வீகை மாரி பெய்து
பாவலர் புகழூஉம் பாற்கர மன்னன்
ஆற்றிய தவமே போற்றுருக் கொண்டென
உதித்த செம்மால்! உருகெழு குமர!
"ஒழியாப் புகழின் ஓங்குபாண் டித்துரை
நிறுவிய சங்கம் நிலைதளா ராது
கரந்தையர் கோனதைப் புறந்தரல் கொண்டான்;
கரந்தைவாழ் சங்கக் காவலன் அளியன்
இலங்குபெத் தாச்சி யெனும்பெயர் வள்ளல்
தன்னொடு பொருந்தித் தாயவட் குறுபணி
இயற்றும் பெற்றியில் இனிது சிறந்தனன்."
என்று, காவல! நின்றிருச் சீரினைக்
கேட்டனம்! வியந்தனம்!! கிளர்மகிழ் வெய்தினம்!!!
தமிழவட் புரக்கும் தாவில் நல்லிசை
இமிழ்கடல் வரைப்பில் எங்கணும் பரப்பும்

காமரு சிறப்பின் தோமில் சீரோய்!
௫௦. முத்து விஜய ரகுநாத ராஜ
இராஜ ராஜேஸ்வர பூஜிதப் பெரியோய்!
ஐய! நுமக்குயாம் அறைவதும் என்னே!
வாழ்க! வாழ்க!நீ வளம்பல வீண்டி
தண்கதிர் மதியெனத் தழைக்கநின் குடைநிழல்!
௫௫ தமிழர் சிறக்கவும் தமிழ்ப்பயிர் தழைக்கவும்
கொண்டநின் எண்ணம் குறைவில தாகுக!
வாழிய பெரும! வாழிய பெரும!!
ஊழி ஊழி வாழிய சிறந்தே!!!

த. வே. உமாமஹேஸ்வரம் பிள்ளை,
சங்கத்தலைவர்,
கரந்தைத் தமிழ்ச்சங்கம்,
தஞ்சை.

உ

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் புதிய அக்ராஸனாதிபதியாகிய
மாட்சிமைதங்கிய இராமநாதபுரம்ராஜா
பா. முத்துராமலிங்கஸேதுபதி
அவர்கள்மீது

வாழ்த்துக்கவி.

நேரிசையாசிரியப்பா.

எல்லாம் வல்ல இறைவன தருளாற்
பல்லாற் றானும் பல்வளம் பல்கச்
சேதுநன் னாட்டையும் செந்தமிழ் மொழியையும்

பாது காக்கும் பாக்கியம் பெறுதலால்
ஒத்தி ராதபூ மடந்தையர்* ஒத்துறை
முத்து ராம லிங்கப் பேரோய் !
விண்மிசை யிவர்ந்து வெங்கதிர் வீசாது
மண்மிசை யிறங்கி வண்மையும் புலமையும்
பண்புறு சைவப் பற்றும் பிறவுமாத்
தண்கதிர் வீசிய தகைமைசால் பாஸ்கர
மன்னவன் பயந்த மன்னவர் திலக !
கன்னல்† நற் றேன்முக் கனிபால் நறுநெய்
கண்டு‡ அமிழ் தென்னக் கற்போர்க் கினிதாம்
தண்டமிழ் வளர்க்குந் தன்மை வாய்ந்த
மதுரைச் சங்கத் தலைவனு மன்னி
மதுர நற்கவி வாணர்க் களப்பிலா
மகிழ்ச்சி யளித்த வள்ளலே! நீயே
புகழ்ச்சிக் குரிய புரவலன் மதுரைச்
சேது பதிஹை ஸ்கூலிற் சேர்ந்துநூல்
ஓதி யுள்ள உரிமை யானும்
நின்னைத் தலைவனாப் பெற்று நிலவும்
மன்னுசீர் மதுரை வண்டமிழ்ச் சங்கத்து
அங்கத் தொருவன் ஆக லானும்
துங்கநற் றமிழிடம் தோன்றுநல் லுணர்வு
ஓதின் இருவேம் உளத்தும் ஒன்றே
ஆத லானும் அரசே! முன்னர்
முகமறி யாதே னெனினும் முகமனு
அகமிக மகிழ்ந்தே ஆக்கமுற் றுன்சீர்
யாண்டும் பொன்மலர் நாற்றமுற் றுலெனப்
பரவி விளங்கப் பரமனைப்
பரவி வணங்குவேன் பன்முறை யானே

அருப்புக்கோட்டை,
7—3—14.

வே. முத்துஸாமி ஐயன்.
எம். ஏ., எல். டி.

---

* பூமகளும் நாமகளும். † கன்னல் - கரும்பு. ‡ கண்டு - கற்கண்டு.

மதிப்புரை.

———:o:———

1. முதலாவது கரிகாலன் ஆராய்ச்சி:—இது, தஞ்சை கல்யாண சுந்தரம் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் L. உலகநாத பிள்ளையவர்களால் சங்கநூல்முதலிய பழையதமிழ்நூல்களையும் சில புதியகொள்கைகளையும் தழுவிச் சோழன்கரிகாற்பெருவளத்தான் வரலாற்றை நன்கு தொகுத்தெழுதி நல்லகடிதத்திற் செவ்விதாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இஃது உயர்தரக்கலாசாலைகளிற் பாடமாகவைக்கத்தக்கது. இதன் விலை அணா 12.

———

2. சாணக்கியசாஹஸம் அல்லது சந்திரகுப்தசரித்திரம்:—(முதற் பாகம்) இது டாக்டர் A. R. வைத்தியநாதசாஸ்திரியார் M. A. M. B. C. M. அவர்கள் குமாரியாரான பண்டிதை பாலாம்பாள் அம்மையால் கன்னடத்தில் நின்றும் தமிழில் மொழிபெயர்த்தெழுதப்பட்டு, மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கத்தலைவர் ஸ்ரீமத் ம. கோபாலகிருஷ்ணையர் அவர்களாற் பரிசோதித்துப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. கல்வியருகிய நம் பெண்மக்களுள் அம்மையவர்கள் அந்நியபாஷைகளிலும் பாண்டித்தியமுடையராய் அரியநூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தளிக்குமாற்றலோடு இப்புத்தகத்தை எழுதியுதவியது எல்லாராலும் பாராட்டத்தகுவதுமன்றி இன்னும் பெண்கல்விவளர்ச்சிக்கு அறிகுறியாகவும் இருப்பதுபற்றி இப்புத்தகம் கலாசாலைகளிற் பாடமாக வைக்கப்படுமென் றெதிர்பார்க்கப்படுகிறது. இதன் விலை ரூ 1.

———

3. தமிழ்ப்புலவர்வரலாறு எண் 1, 2, 3:—இது கோயமுத்தூர்ச் சாரதாவிலாசசபையின் காரியதரிசியாகிய ஸ்ரீமத் சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்களால் இயற்றப்பட்டது. இதில் முறையே ஒட்டக்கூத்தர், இரட்டைப்புலவர், படிக்காசுப்புலவர் இவர்களுடைய சரித்திரங்கள் இக்காலச் சரித்திரஆராய்ச்சிமுறையில் தமக்குத் தோன்றிய சில சீர்திருத்தங்களுடன் பலமேற்கோள்காட்டி எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 8.

———

4. பரிணயமீமாம்ஸா:—இது கடயம் ஸ்ரீமத்-நடேசசாஸ்திரிகளால் வடமொழியில், சுருதிமிருதி முதலிய பிரமாணங்களைக்கொண்டு வைதிகர்களுக்கு ருதுமதீவிவாகம் சாஸ்திரசம்மதமில்லாததென்பது நிரூபித் தெழுதப்பட்டிருக்கிறது. இது தமிழில் மொழிபெயர்க்கப்பட்டாற் பலரும் அறிதற் கெளிதாகும். இதன் விலை அணா—12.

———:o:———

5. விசயத்தவசியும் சிவவேடனும்:—இது பாரதத்துள் அருச்சுனன்றவநிலைச்சருக்கத்தைத்தழுவி வேலூர்க்காலேஜின் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத்-பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரார்ற் றமிழ்நடையிலெழுதப்பட்டதொரு சிறுகதை. இதன்விலை அணா—3.

———:(o):———

6. வாமனசரித்திரம்:—இதுவும் வேலூர்க்காலேஜின் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத்-பு. க. ஸ்ரீநிவாஸாசாரியாரால் இராமாயணத்துள்ள வாமனசரிதத்தைப் பெரும்பாலுந்தழுவித் தமிழ்வசனநடையில் எழுதப்பட்டது. இதன்விலை அணா—2.

———

7. எல்லாம் ஒன்றே:—இது தஞ்சை ஸ்ரீமத்-வையை. ஆர். சுப்பிரமணிய ஐயரவர்களால், எல்லாம் ஒன்று, நீயார், கடவுள், சாந்தம், செயல், அகம்பாவம் என்னும் விஷயங்களை வேதாந்தமுறைப்படி விளக்கியெழுதிய சிறுபுத்தகம். இதன்விலை அணா—2.

8. திருத்துடிசைப்புராணம்:—இது திருத்துடிசையென்னும் க்ஷேத்திரத்தைப்பற்றி 516 செய்யுளால் பாடப்பட்டதொரு தலபுராணம். இதையியற்றிய ஆசிரியர் இன்னாரென்று புலப்படவில்லை. இது துடிசைகிழார் அ. சிதம்பரனார் என்பவராற் பதிப்பிக்கப்பட்டது. இதன்விலை அணா—12.

———

9. விபூதிவிளக்கம்:—இதுவும் துடிசைகிழார் அ. சிதம்பரனார் என்பவரால் காமிகமுதலிய நூல்களிலுள்ள ஆதாரங்களோடு நன்கு விளக்கியெழுதப்பட்டிருக்கிறது. இதன்விலை அணா—4.

மேற்கண்டபுத்தகங்கள்வேண்டுவோர் அவற்றின் ஆசிரியர்கட்கெழுதிப்பெற்றுக்கொள்க.

---

10. சங்கரசுந்தரி:—இது கும்பகோணம் இந்தியன்பத்திரிகையதிபர் தென்கரை T. V. ஐயாசாமி ஐயரவர்களால் கல்யாணத்தரகர் முதலிய சில ஒழுங்கீனர்சாமர்த்தியாதிகளைக் காட்டி யெழுதியதொரு புதிய கட்டுக்கதை. இதன்விலை அணு—12. வேண்டுவோர் M. கணபதிலிங்கம்பிள்ளை, புதுமண்டபம், மதுரை. என்ற விலாசதார்க்கெழுதிப்பெறலாம்.

—:(o):—

மேற்கண்டபுத்தகங்கள் பத்தும் பாண்டியன்புத்தகசாலையிற் சேர்க்கப்பெற்றன.

தொல்காப்பியம்: பொருளதிகார ஆராய்ச்சி :—இது ஸ்ரீமத்–வே· முத்துஸாமி ஐயர், எம். ஏ., எல். டி. அவர்களால் எழுதப்பட்டு, மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பன்னிரண்டாவது வருஷோற்சவக்கொண்டாட்டத்திற்குக் கூடிய சபையில் 25—5—1913ல் மகா-ா-ா-ஸ்ரீ ஜெ. எம். நல்லசாமிப்பிள்ளை பி. ஏ., பி. எல். அவர்கள் அக்கிராசனத்தின்கீழ்ப் படிக்கப்பட்டுச் செந்தமிழ் கக, கஉ ஆந்தொகுதிகளில் வெளியிடப்பட்டது. இதில் தொல்காப்பியத்துள்ள அகப்பொருளிலக்கணங்களாலறியப்படும் விஷயங்களை நம்பியகப்பொருள்கொண்டும் புறப்பொருளிலக்கணங்களால் அறியப்படும்விஷயங்களைப் புறப்பொருள்வெண்பாமாலைகொண்டும் ஆராய்ந்து அவற்றை யெல்லோரும் எளிதினுணரும்படி சிலமேற்கோள்களுடன் எளியதமிழ்நடையிற் றெளிவாயெழுதப்பட்டிருக்கிறது. இதனால் காமமும் பொருளும் பற்றிக் கவிபாடும்புலவர்களும், அக்கவிகளின்பொருளுணரப்புகுபவரும் உணரவேண்டும் உலகியல்வழக்கும் புலனெறிவழக்கும் அறியத்தகும். இது இப்பொழுது மதுரைத்தமிழ்ச்சங்கம் அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டுவருகிறது. கூடியவிரைவில் வெளிவரும்.

பத்திராதிபர்.